விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 181 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 04 வியாழக்கிழமை (18.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



## இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் யோஷித ராஜபக்ஷ கைது

### வெளிநாடு செல்ல பயணத் தடையும் விதிப்பு

(கொழும்பு)

இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவினால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் புதல்வர் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப் பட்டு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரை தலா 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 3 சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு உத்தரவிட்ட கொழும்பு நீதிவான் நீதிமன்றம் சந்தேகநபருக்கு வெளி நாட்டு பயணத்தடையும் விதிப்பதாக அறிவித்துள்ளது.

இலஞ்சஊழல்விசாரணை ஆணைக் குழுவின் அதிகாரிகள் மற்றும் சந்தேக

03ஆம் பக்கம் பார்க்க

## பசில் ராஜபக்ஷவை உடன் கைது செய்க

### கோட்டை நீதிமன்றம் அதிரடி உத்தரவு



(கொழும்பு)

சுற்றுலா மேம்பாட்டுத் திணைக்களத்தின் நிதியை முறைகேடாகப் பயன் படுத்திய குற்றச்சாட்டு தொடர்பாக பசில் ராஜபக்ஷவை கைது செய்யுமாறு நேற்று கொழும்பு நீதிவான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

(03 ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் நாளையும் ஆடியபாதம் வீதியூடாக போக்குவரத்துக்குத் தடை

(யாழ்ப்பாணம்)

இன்றும் நாளையும் ஆடியபாதம் வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டு ள்ளது என நல்லூர் பிரதேசசபை அறிவித் துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## கோட்டாவின் மனு இன்று விசாரணைக்கு

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு அமைவாக, தம்மைக் கைது செய்வதைத் தடுக் கும் உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி, முன்னாள் ஜனாதிபதி

15ஆம் பக்கம் பார்க்க

## யாழிலிருந்து நாகப்பட்டினத்திற்கு தங்கம் கடத்த முயற்சி

### 26 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை துறைமுகத்திலிருந்து, கப்பல் ஊடாக தங்கம் கடத்துவதற்கு முயற்சித்ததாக கூறப்படும் சுமார் 26 பேரின் பயணம் தடுத்து நிறுத்தப் பட்டுள்ளது.

இந்தியப் பிரஜைகள் இரு வரிடம் தலா 100 கிராம் தங் கம் பறிமுதல் செய்யப்பட் டதை அடுத்து, குறித்த நட வடிக்கை முன்னெடுக்கப்ப ட்டதாக சுங்க ஊடகப் பேச் சாளர் உறுதிப்படுத்தினார்.

16ஆம் பக்கம் பார்க்க

## இலங்கையில் அதிகளவான மனித எச்சங்கள் அடையாளப்படுத்தப்பட்ட பகுதியாக செம்மணி பதிவு

### 14 என்புக் கூடுகள் புதிதாக நேற்று அடையாளம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் அதி களவான மனித எச்ச ங்கள் அடையாளப்படு த்தப்பட்ட பகுதியாக செம் மணி மனிதப் புதைகுழி பதிவாகியுள்ளது.

இதேவேளை 14 என் புக் கூடுகள் நேற்று புதி தாக அடையாளம் காணப் பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 27 ஆம் நாள் அகழ்வுப்

15ஆம் பக்கம் பார்க்க



## உமையாள்புரத்தில் விபத்து இளைஞன் உயிரிழப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உமையாள்புரத்தில் இடம்பெற்ற மோட் டார் சைக்கிள் விபத்தில் இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அளவெட்டியைச் சேர்ந்த

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியை பார்வையிட

### நீதி அமைச்சருக்கு நீதிமன்றம் அனுமதி


(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதை குழி அகழ்வைப் பார்வை யிட நீதி அமைச்சருக்கு யாழ். நீதிவான் நீதிமன்றம் அனு

15ஆம் பக்கம் பார்க்க

## பட்டா - லொறி விபத்து இருவர் உயிரிழப்பு


### வவுனியாவில் பயங்கரம்



(வவுனியா)

வவுனியாவில் பட்டாவும் லொறி யும் மோதி விபத் துக்குள்ளானதில் இருவர் உயிரி

15ஆம் பக்கம் பார்க்க



நடுவு நிலை தவறாது நடக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டும் மணி விழா வாழ்த்தும்



## ஆசிரியுரை

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு மாடல்ல மற்றயவை"

என்பது திருக்குறள். மனிதனாக பிறந்த ஒவ்வொருவருக்கும் அழிவற்ற கல்வியே சிறந்த செல்வமாகும். அக் கல்வியை வழங்கிக் கொண்டிருக்கும் யா/தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தின் அதிபராக சேவையாற்றி இன்று மணிவிழாக் காணும் திரு.கணேஸ் உதயரூபன் அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன்.

நூறு வருடங்களுக்கு மேலாக கல்விச் சுடரை வழங்கி இருள் அகற்றிக் கொண்டிருக்கும் எமது தாயின் அதிபராக கடந்த ஐந்து வருடங்களாக சேவையாற்றிய அதிபர் அவர்கள் கல்விச் சமூகத்துடன் அன்பாகவும். அமைதியாக வும் பழகிய ஒருவராவார். மாணவர்களின் கல்வி செயற்பாடுகளிலும் ஏனைய இணைப்பாட விதான செயற்பா டுகளிலும் அவர்களை ஊக்குவித்து வெற்றிபெறச் செய்தவர். பெற்றோர்களுடனும். பழையமாணவர்களிடமும் அன்பாக பழகி அவர்களது ஆதரவைப் பெற்று பாடசாலையை வளர்த்த செயல்வீரர். அவர் தனது ஓய்வு காலத்தில் உடல் நலமும் உளநலமும் பெற்று குடும்பத்தினருடன் மகிழ்ச்சி யுடன் வாழ வேண்டுமென ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் அருள் வேண்டி வாழ்த்துகிறேன்.

**உ.ரமணன் ஐயர், ஆலய பிரதம குரு, செல்வச் சந்நிதி ஆலயம், தொண்டைமானாறு.**



## கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம். வடமராட்சி மண்ணில் பல வரலாற்றுப் பாரம்பரியுங்களை கொண்டு கல்வித்துறைக்கு அளப்பரிய சேவையாற்றி வரும் யா/தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகா வித்தியாலயத்தில் அதிபராக சிறப்பாகப் பணியாற்றி 18.06.2026 இல் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு.கணேஸ் உதயரூபன் அவர்களின் மணிவிழா மலரிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

வர்த்தகப்பட்டதாரியான இவர் ஆசிரியராக 14 வருடங்கள் பல பாடசாலைகளில் பணியாற்றி பல மாணவர்களின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்ததுடன் 19.03.2012 இலிருந்து அதிபர் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்டதுடன் தன்னுடைய தொழில் தகைமைகளை அதிகரிப்பதற்கு கல்வி முதுமாணிப் பட்டத்தையும் பூர்த்தி செய்துள்ளார். இதன் மூலம் பாடசாலைகளில் சிறந்த முகாமைத்துவ நடைமுறை களை செயற்படுத்தி பாடசாலை அபிவிருத்திக்கும் சமூக மேம்பாட்டிற்கும் வழிவகுத்துள்ளார்.மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் பாடசாலை பழைய மாணவர்க ளுடனும். சமூகத்துடனும் அன்பாகவும் மனிதநேயத்துடனும் உறவாடி அவர்களிடத்தில் நன்மதிப்புகளுடன் திகழ்ந்தவர்.

இவர் இப்பாடசாலையில் 05 வருடங்கள் அதிபராக சேவையாற்றி மாணவர்களின் கல்வி இணைப்பாட விதான செயற்பாடுகளில் சிறந்த அடைவுமட்டத்தை பெறுவதற்கு உழைத்துள்ளார்.திரு.கணேஸ் உதயரூபன் அவர்களின் இன்றைய மணிவிழா நாளில் அவரை வாழ்த்துவதுடன் அவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய இறைவனை பிரார்த்திப்பதோடு மணிவிழாக் குழுவினருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**க.கண்ணன், கோட்டக் கல்விப் பணிப்பாளர், பருத்தித்துறை**



## பணியாளர் நலன்புரி சங்கத் தலைவரின் வாழ்த்து

கல்விப் பணியில் சிகரம் தொட்ட எங்கள் அதிபருக்கு மணிவிழா வாழ்த்துக்கள்! "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற முதுமொழிக்கு இலக்கணமாகத் திகழ்ந்து, எமது பாடசாலையைத் தன் திறமையான ஆளுமையாலும், அர்ப்பணிப்புள்ள சேவையாலும் நன்மதிப்புமிக்க உன்னத நிலைக்கு உயர்த்திய எமது பெருமதிப்பிற்குரிய அதிபர் திரு. க.உதயரூபன் அவர்களின் அறுபதாவது அகவை நிறைவு நாளில் பணியாளர் நலன்புரிச் சங்கம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

தொலைநோக்குப் பார்வையும், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களை சமத்துவத்தோடு அரவணைத்துச் செல்லும் நற்பண்பும், மாணவர்களின் எதிர்காலத்தை வளமாக்க எடுக்கும் அயராத முயற்சியும் எமது பாடசாலை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கவை. ஒரு நிர்வாகியாக மட்டுமன்றி எமது சுக துக்கங்களில் பங்கெடுத்து, ஒரு தந்தையைப் போல வழிநடத்தும் உங்களின் குணம் போற்றத்தக்கது.

பாடசாலையில் ஆசிரியர்கள். கல்விசாரா ஊழியர்கள். மாணவர்கள். பெற்றோர்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்று அவர்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் தீர்த்து வைக்கும் ஆளுமை எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியம்.

அறுபதாண்டு கால உங்களின் உன்னத வாழ்வும், கல்வி உலகிற்கு நீங்கள் ஆற்றிய அரும்பணிகளையும் போற்றும் இந்த இனிய மணிவிழா நன்னாளில் எல்லா நலமும் பெற்று நோய்நொடியின்றி நீண்ட ஆயுளுடனும். மன அமைதியுடனும் பல்லாண்டு காலம் வாழ தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகனை வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**கோ.ருசியந்தன் (JP)**
**தலைவர், பணியாளர் நலன்புரிச் சங்கம்,**
யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்.



## திரு.கணேஸ் உதயரூபன்

SLPS-I ,B.Com, Dip.in.Edu (Merit),M.Ed (Merit)

| | |
|---|---|
| பிறப்பிடம் | - 19.06.1966 |
| இடம் | - மானிப்பாய் |
| பெற்றோர் | -கணேஸ்-புவனேஸ்வரி |
| ஆரம்பக் கல்வி | -யா/மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை |
| இடைநிலைக்கல்வி | - யா/மானிப்பாய் இந்துக்கல்லூரி |
| | யா/விக்னேஸ்வராக் கல்லூரி |
| | கிளி/இந்து மகா வித்தியாலயம் |
| உயர்தரம் | -யா/வைத்தீஸ்வராக் கல்லூரி |
| பட்டம் | - B.Com யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் |
| | - Dip.in.Edu தேசிய கல்வி நிறுவகம் (Merit) |
| | - M.Ed யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் (Merit) |
| ஆசிரியர் சேவை | - 05.01.1992-16.03.1998 |
| | யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| | (தொ.ஆசிரியர்) |
| நிரந்தர நியமனம் | - யா/இளவாலை மெய்கண்டான் ம.வி |
| | 17.03.1998 - 31.12.2000 |
| | - யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி |
| | 01.01.2001 - 31.12.2002 |
| | - யா/சிதம்பராக் கல்லூரி |
| | 01.01.2003 - 03.05.2011 |
| | - யா/உடுத்துறை ம.வி |
| | 04.05.2011 - 25.09.2012 |
| | - யா/கம்பர்மலை வித்தியாலயம் |
| | 26.09.2012 - 13.12.2012 |
| அதிபர் சேவை | - யா/உடுத்துறை இந்து ஆரம்பப் பாடசாலை |
| | 19.03.2012 - 25.09.2012 |
| | - யா/கெருடாவில் இ.த.க பாடசாலை |
| | 14.12.2012 - 30.09.2021 |
| | - யா/தொண்டைமானாறு வீ.ம.வி |
| | 01.10.2021 - 18.06.2026 |




## பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி

யா/தொண்டைமானாறு வீரகத்திப் பிள்ளை மகாவித்தியாலயம் ஓர் பரந்த ஆலவிருட்சம் போன்று வேரூன்றி தனது நிழலில் வாழ்பவர்களுக்கு மாத்திரமின்றி ஏனையோருக்கும் கல்வி. கலை. கலாசாரம். ஒழுக்கம் போன்றவற்றை போதித்து தானும் வளர்ச்சி அடைந்து "தொண்டைமானாறு" என்ற ஊரின் பெயரையும் மேன்மையடைய உறுதுணையாக செயலாற்றி வருகிறது என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மையாகும்.

அந்த வகையில் எமது பாடசாலையில் அதிபராக 2021 ஆம் ஆண்டு கடமைகளைப் பொறுப்பேற்று பாடசாலையின் கல்வி. இணைப்பாடவிதான செயற்பாடுகள் போன்றவற்றின் அடைவு மட்டங்களை மேம்படுத்துவதில் மாத்திரமின்றி பாடசாலையின் அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் தனது முழுமையான அர்ப்பணிப்புடன் கடமைகளை மேற்கொண்டு 18.06.2026 இன்று ஓய்வு பெறும் எமது பாடசாலையின் மதிப்பிற்குரிய அதிபர் திரு.கணேஷ் உதயரூபன் அவர்களை பழைய மாணவன் என்ற ரீதியிலும். பாடசாலையின் அபிவிருத்திக்குழுவின் செயலாளர் என்ற ரீதியிலும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிப்பதோடு. அதிபர் அவர்களின் ஓய்வு காலம் சிறப்புற அமையவும். நீடூழி வாழவும் சந்நிதி வேலவனின் அருளாசிகள் வழியமைக்கும் என வாழ்த்துகின்றேன்.

**ந.வைகுந்தன், செயலாளர்**
**பாடசாலை அபிவிருத்திக்குழு.**



## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

அதிபர் யா/தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தியாலயத்தில் கடமையாற்றி ஓய்வுபெறும் திரு.க.உதயரூபன் அதிபரின் ஓய்வுக்கான வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமிதம் அடைகின்றேன். 2012 ஆம் ஆண்டில் அதிபர் சேவையில் தெரிவு செய்யப்பட்டு பல பாடசாலைகளில் அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெறும் திரு.க.உதயரூபன் அவர்கள் தான் கடமையாற்றிய பாடசாலைகளில் சிறப்பான அதிபராகவும். ஆசிரியருக்கும் மாணவர்களுக்கும் ஓர் வழிகாட்டியாகவும் பாடசாலையின் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் பெரும் பங்காற்றியுள்ளார்.

இவர் அதிபர் ஆவதற்கு முன்னர் 1992 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர் பணியையும் ஆற்றியுள்ளார். இவரது ஆசிரியர் சேவை. அதிபர் சேவை என்பன பல மாணவர்களின் கல்வி இலக்குகளை இலக்காகக் கொண்டு நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் கடமையாற்றியுள்ளார். எனது சேவைக் காலத்தில் என்னால் அவதானிக்கப்பட்ட காலம் முதல் இவர் பாடசாலையின் நிர்வாகச் செயற்பாடுகளையும் சமூகத்தின் தேவைகளையும் ஒருங்கிணைந்த வகையில் அமையக் கூடியதாக இவரது கல்விப் பணி அமைந்திருந்தது.

18.06.2026ஆம் திகதியுடன் கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெறும் திரு.க.உதயரூபன் அவர்கள் தனது ஓய்வு காலத்தை தனது குடும்பத்தாருடன் சிறப்பாக வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும் என மனதார வாழ்த்துகின்றேன்.

**க.சத்தியபாலன், வலயக் கல்விப் பணிப்பாளர்**
**வலயக் கல்வி அலுவலகம், வடமராட்சி**



## பிரதி அதிபரின் வாழ்த்துச் செய்தி

யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலத்தின் அதிபராக 2021 ஆம் அண்டு பொறுப்பேற்று 18.06.2026 இன்றுடன் 05 வருடங்கள் எங்கள் வித்தியாலயத்தின் அதிபராக கடமை புரிந்து ஓய்வு பெறும் எங்கள் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய திரு. கணேஸ் உதயரூபன் அவர்களுடன் கடமை புரிந்தவன் என்ற வகையில் அவரது தலைமைத்துவ ஆற்றலை கண்டு வியக்கின்றேன். அவரது மென்மையான அணுகுமுறையுடனான நிர்வாகத்திறன் பாடசாலையின் கல்வி அடைவுகளை சிறப்புற அடைவதற்காக அனைவரது ஒத்துழைப்பையும் மிக இலகுவாக பெற வழிவகுத்தது.தலைமைத்துவதற்கான தொடர்பாடல் திறனை மிக சிறப்பாக ஆற்றக் கூடிய வல்லமையை கண்டு வியந்திருக்கின்றேன்.

பொறுப்புக்களை ஒப்படைப்பதில் ஒவ்வொருவருடைய மனநிலையையும் நன்கு புரிந்து கொண்டு பொறுப்புக்களை ஒப்படைப்பதோடு அச் செயற்பாடு சிறப்புற நடைபெறுவதை உறுதிப்படுத்தும் நுட்பமான ஆற்றல் அவரது சிறப்புக்கு மேலும் வலுச் சேர்க்கிறது.

இவரது காலத்தில் கல்வி அடைவுகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளினதும் அடைவுகள் மிகச் சிறப்பானதாக அமைந்துள்ளது. அரச உத்தியோகத்தர் அனைவரும் அறுபது வயதில் ஓய்வு பெறவேண்டும் என்ற நியதிக்கு ஏற்ப ஓய்வு பெற்றுச் செல்லும் அதிபர் திரு.க.உதயரூபன் அவர்கள் பல்லாண்டுகாலம் தனது குடும்பத்தினருடன் நிறைவாக வாழ எல்லாம் வல்ல ஆற்றங்கரை வேலன் அருள்புரிவாராக..

**திரு.செ.கணேசலிங்கம், பிரதி அதிபர்**
**யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்.**

## பழைய மாணவர் சங்க செயலாளர்



மணிவிழா நாயகனுக்கு வாழ்த்துக்கள்
அன்பிற்கினிய அதிபரே.
அறிவின் ஒளி விளக்கே.
ஒழுக்கத்தின் உயர்ந்த உருவமே.
இனிய அறுபதாம் பிறந்தநாள்
நல் வாழ்த்துக்கள் !
தோல்வியைக் கண்டு துவளாமல்
வெற்றியைக் கண்டு செருக்கடையாமல்
எளிமையுடன் வாழ்வது எப்படி என்பதை
மாதிரி தலைவராக உணர்த்தினீர்களே.
மாணவர்களின் எதிர்காலத்தை வடிவமைத்தீர்.
ஆசிரியர்களுக்கு ஊக்கத்தின் உருவமாய் இருந்தீர்.
பழைய மாணவர் சங்கத்தோடு நட்பாய் நடந்தீர்.
சமூகத்தோடு அர்ப்பணிப்பாய் வாழ்ந்தீர்.
இன்று உங்கள் அறுபதாம் அகவையில்
உங்களுக்கு எங்கள் இதயபூர்வமான வாழ்த்துக்கள்
பல்லாண்டு காலம் ஆரோக்கியத்துடனும்
இறையருளுடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

**சி.சுதந்திரதாஸ், பழைய மாணவர் சங்கம்,**
**தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயம்**

**வாழ்த்துவோர் - பணியாளர் நலன்புரிச்சங்கம்**
**யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்**
**தொண்டைமானாறு**

(7853)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எரிபொருள் விலையைக் குறைப்பதற்கு எவ்வித சாத்தியமும் இல்லை

## பிரதி அமைச்சர் அனில் ஜயந்த




உலக சந்தையில் தற்போது எரிபொருள் விலைகள் வீழ்ச்சியடைந்த போதிலும், அந்த விலைகளுக்கு ஏற்ப உள்நாட்டில் நிலவும் எரிபொருள் விலைகளைக் குறைப்பதற்கு எவ்வித சாத்தியமும் இல்லை எனத் தொழில் அமைச்சரும் நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சருமான அனில் ஜயந்த தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (17) நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அமைச்சர் இதனைத் தெளிவுபடுத்தினார்.

தற்போது நாட்டில் நுகரப்பட்டு வருவது இதற்கு முன்னர் அதிக விலைக்கு கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள் என்பதால், அந்த விலைகளின் கீழ் இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் கையிருப்பு தீரும் வரை உள்நாட்டில் எரிபொருள் விலையைக் குறைப்பதற்குச் சாத்தியமில்லை. இருப்பினும் அதிக விலைக்கு இறக்குமதி செய்யப்பட்ட எரிபொருள் நுகர்வு நிறைவடைந்த பின்னர், விலை குறித்து ஒரு முடிவை எடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை எமக்கு எதிர்காலத்தில் வரவிருப்பது கடந்த மாதங்களில் கொள்வனவு செய்தவையாகும். குறைந்த விலையிலான எரிபொருளை எதிர்காலத்திலேயே எம்மால் பெற்றுக்கொள்ள முடியும்.

அதற்கு சில காலதாமதம் ஏற்படும். ஆனால் விலை குறையும் என நாம் எதிர்பார்க்கிறோம். அதற்கமைய, தற்போது வழங்கப்பட்டுள்ள சலுகையை நீக்காமல் இதே விலையில் பேணுவதா? அல்லது விலையைக் குறைப்பதா? என்பது குறித்து எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் எனத் தெரிவித்தார். (ம-7)

# புலிகளின் ஆயுதங்களைத் தேடி சம்மாந்துறையில் அகழ்வு



விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைத் தேடி சம்மாந்துறையில் நேற்று அகழ்வுப் பணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொய்யும் வட்டை கீழ்க்கண்டம் பகுதியில் அமைந்துள்ள தனியார் வயல் காணியொன்றில் நேற்று நீதிமன்ற உத்தரவின் பேரில் விசேட அகழ்வுப்பணி முன்னெடுக்கப்பட்டது.

அம்பாறை விசேட பொலிஸ் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளால் ஆயுதங்கள் மற்றும் தங்கம் உள்ளிட்ட பொருட்கள் நிலத்தடியில் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பக்கோ இயந்திரத்தின் உதவியுடன் காணியில் பல மணி நேரம் மண் அகழப்பட்ட போதிலும் எந்தவித தடயப் பொருளோ அல்லது சந்தேகத்திற்கிடமான பொருளோ கண்டு பிடிக்கப்படவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். இதையடுத்து அகழ்வுப் பணி நிறுத்தப்பட்டது.

குறித்த பகுதி கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் காணப்பட்ட பகுதியாகவும் அவர்களின் போக்குவரத்து மற்றும் நகர்வுகளுக்கான வழித்தடமாகவும் பயன்படுத்தப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த அகழ்வுப் பணிகள் நேற்று காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை நடைபெற்றன. (ம-7)

# திருமலைக் கடற்கரையில் புத்தர் சிலை வைப்பு

## வழக்கு ஜூலை மாதம் ஒத்திவைப்பு

திருகோணமலை கடற்கரையோர புத்தர் சிலை வைப்பு தொடர்பான வழக்கு எதிர்வரும் ஜூலை மாதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

திருகோணமலை பிரதான டச்பே கடற்கரைப் பகுதியில் கடற்கரையில் இருந்து சுமார் 11 மீற்றருக்கு உட்பட்ட பகுதியில் கடந்த வருடம் 2025 நவம்பர் மாதம் 16, 17ஆம் திகதிகளில் சட்ட விரோதமான முறையில் கட்டுமானத்தை மேற்கொண்டார்கள் எனவும் புத்தர் சிலையை நிறுவி குழப்பத்தை ஏற்படுத்த முயற்சித்தார்கள் என்ற குற்றச்சாட்டில் திருகோணமலை துறைமுக பொலிஸாரினால் கடலோரப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் 28 (01) மற்றும் 14 (01) போன்ற சட்ட விதிகளுக்கு அமைவாக திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் 17.11.2025 அன்று வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

நேற்று (17) வழக்கு மீண்டும் மன்றத்தில் எடுக்கப்பட்ட நிலையில் வழக்கானது எதிர்வரும் 08.07.2026 அன்று மீண்டும் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படவுள்ளது. (ம-7)




## இலஞ்ச ஊழல்...

நபரின் சட்டத்தரணிகள் முன்வைத்த சமர்ப்பணங்களை பரிசீலித்த பின்னரே கொழும்பு மேலதிக நீதிவான் லஹிரு சில்வா இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இதேவேளை, இலங்கைக் கடற்படை மற்றும் பிரித்தானிய கடற்படை அக்கடமியில் இணைந்தது தொடர்பான விசாரணைக்கு அமைவாக, இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு விடுத்த அறிவித்தலுக்கு இணங்க யோஷித ராஜபக்ஷ நேற்று (17) குறித்த ஆணைக்குழுவில் முன்னிலையாகியிருந்த நிலையில் நடத்தப்பட்ட விசாரணைகளின் பின்னர் யோஷித ராஜபக்ஷ கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பசில் ராஜபக்ஷ...

நிதி முறைகேடு தொடர்பான நீதிவான் விசாரணை நேற்று (17) நீதிமன்றத்தின் முன் மீண்டும் விசாரணைக்கு வந்த போது நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

சந்தேகநபர் சார்பாக நீதிமன்றத்தில் முன்னிலையான ஜனாதிபதி சட்ட ஆலோசகர் கலிங்க இந்ததிஸ்ஸ, மூன்றாவது சந்தேகநபர் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 127 ஆவது பிரிவின் கீழ் இரகசிய வாக்குமூலம் அளிக்க விருப்பம் தெரிவித்துள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

2014 ஆம் ஆண்டில் சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்திற்கு ஒதுக்கப்பட்ட ரூ.7.8 மில்லியனை அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காகச் செலவிடாது, ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான 12,000 டி-ஷர்ட்டுகளை அச்சிட்ட சம்பவம் குறித்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்ட விரோதச்சொத்துக்கள் பிரிவு நீதிமன்றத்தில் அறிக்கையளித்திருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் காவலில் வைக்கப்பட்டிருந்த இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் முன்னாள் முகாமைத்துவப் பணிப்பாளர் ரூமி ஜாஃபரை, தலா ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளிலும் சந்தேகநபர் வெளிநாடு செல்வதற்கும் தடை விதித்தும் நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.

இந்த சந்தேகநபர்கள் மீது பொதுச் சொத்துச் சட்டத்தின் கீழ் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் நீதிமன்றத்திற்குத் தெரிவித்துள்ளனர்.

"பி" அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள இந்தச் சம்பவம் தொடர்பாகச் சந்தேகநபராகப் பெயரிடப்படுவாரா? என்று நீதிபதி குற்றப்புலனாய்வுத் துறையிடம் விசாரித்துள்ளார்.

இதன்போது, இது தொடர்பாக அரச வழக்கறிஞரின் அறிவுறுத்தல்கள் இன்னும் பெறப்படவில்லை என்று குற்றப்புலனாய்வுத்துறை தெரிவித்துள்ளதாக நீதிபதி திறந்த நீதிமன்றத்திற்குத் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தின் மூன்றாவது சந்தேகநபரான நிர்வாகப் பணிப்பாளரும் "பி" அறிக்கையில் பெயரிடப்பட்ட சந்தேகநபரான நிதிப் பணிப்பாளரும் சம்பவம் தொடர்பான முதல் மற்றும் மூன்றாவது பற்றுச்சீட்டுகளில் கையெழுத்திட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக நிதிப் பணிப்பாளர் இன்னும் கைது செய்யப்படாததால், மூன்றாவது சந்தேகநபருக்கு பிணை வழங்கப்படுகிறது. அதன்படி, இந்த வழக்கில் மூன்றாவது சந்தேகநபரான நிர்வாகப் பணிப்பாளர் ரூமி ஜாஃபருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.


இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு ஒக்ரோபர் 14 அன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விளையாட்டுச் செய்திகள்

# தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தல் யாழ். வீரர்களுக்கு தங்கம், வெள்ளி







அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட கோலூன்றி பாய்தல் போட்டியில் யாழ் மாவட்ட வீரர்கள் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களைக்கைப்பற்றியுள்ளனர்.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான கனிஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட மெய்வல்லுநர் போட்டிகள் கொழும்பு தியகம ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் 20 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சு.கஜானன் 4.40 மீற்றர் உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும் அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஆ.தனோஜனன் 4.30 மீற்றர் உயரம் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும் கைப்பற்றியுள்ளனர். (3-90)

# யாழ். வீரர் மாதுலன் குறித்து லசித் மலிங்க புகழாரம்






இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்க, யாழ்ப்பாணம் புனித பரியோவான் கல்லூரியின் இளம் கிரிக்கெட் வீரரான குகதாஸ் மாதுலன் குறித்து தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் விசேட பதிவொன்றை பகிர்ந்துள்ளார்.

அந்த பதிவில், குகதாஸ் மாதுலன் திடீரென வானத்திலிருந்து குதித்து "ஏ" அணிக்குள் வரவில்லை எனவும், அவர் இந்த விளையாட்டுக் கட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டு நீண்டகாலமாக உழைத்து வருகிறார் என்பது தகுதியானவர்களுக்குத் தெரியும் எனவும் மலிங்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அவர் 19 வயதுக்குட்பட்ட இலங்கை அணியில் விளையாடவில்லை என்றும், கிரிக்கெட் நிறுவனத்தின் பயிற்றுவிப்பாளர்கள் அவரைப் பற்றி அறிந்திருக்கவில்லை என்றும் பலர் நினைக்கக்கூடும், ஆனால் அவரது திறமை நீண்டகால முயற்சியின் பலனாகும். அடுத்து வரவிருக்கும் சர்வதேச ரி-20 மற்றும் ஒருநாள் போட்டிகளுக் கான இலங்கை அணியில் இவர் கண்டிப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண் டிய ஒரு முக்கிய வீரர் என மலிங்க வலியுறுத்தியுள்ளார்.

மேலும், ஒரு வேகப்பந்து வீச்சாளருக்கு 19 முதல் 21 வயதுக்குட்பட்ட காலப்பகுதியே மிகச் சிறந்த வயதாகும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், இந்த இளம் வீரரின் எதிர்காலப் பயணத்தை எதிர்பார்த்துக் காத்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (3)

# அல்ஜீரியாவை சாய்த்த ஆர்ஜென்டினா ஹெட்ரிக் கோல் அடித்து மெஸ்ஸி மிரட்டல்

கால்பந்து தொடரின் குழு J பிரிவின் தங்களது முதல் ஆட்டத்தில் நடப்பு சாம்பியனான ஆர்ஜென்டினா அணி, அல்ஜீரியாவை எதிர்கொண்டு 3-0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.

ஆர்ஜென்டினா அணியின் தலைவர் லியோனல் மெஸ்ஸி, தனது ஆட்டத்தின் மூலம் ஹெட்ரிக் கோல் அடித்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இந்த ஆட்டம் லியோனல் மெஸ்ஸி ஆர்ஜென்டினா தேசிய அணிக்காக விளையாடும் 200 ஆவது சர்வதேச போட்டியாகும்.

ஆட்டத்தின் தொடக்கத்திலிருந்தே ஆதிக்கம் செலுத்திய ஆர்ஜென்டினா வுக்கு 17 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி தனது அபாரமான இடது கால் ஷாட் மூலம் முதல் கோல் அடித்து 1-0 என முன்னிலை தந்தார்.பின்னர் அல்ஜீரிய தற்காப்பு அரணை உடைத்து பந்தை எளிதாக வலைக்குள் தள்ளி மெஸ்ஸி தனது இரண்டாவது கோலை பதிவு செய்தார்.ஆட்டத்தின் 76 ஆவது நிமிடத்தில் மெஸ்ஸி தனது மூன்றாவது கோலை அடித்து கால்பந்து வரலாற்றில் தனது முதல் ஹெட்ரிக்கை பதிவு செய்தார்.

இந்த ஆட்டத்தின் மூலம் லியோனல் மெஸ்ஸி கால்பந்து வரலாற்றில் மொத்தம் 16 கோல்களுடன், ஜெர்மனியின் புகழ்பெற்ற வீரர் மிரோஸ்லாவ் குளோசேயின் அதிக கோல்கள் அடித்த வரலாற்று சாதனையை சமன் செய்துள்ளார்.

மேலும், கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு அடுத்தபடியாக ஐந்து வெவ்வேறு கால்பந்து தொடர்களில் கோல் அடித்த இரண்டாவது ஆண் வீரர் என்ற பெருமையையும் மெஸ்ஸி பெற்றுள்ளார். (3)



# தேசிய மட்ட வலுதூக்கல்; வி. கே அக்கடமிக்கு 5 பதக்கங்கள்



கனிஷ்ட, சிரேஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட வலுதூக்கல் போட்டியில் வி.கே. அக்கடமி 5 பதக்கங்களை கைப்பற்றியுள்ளனர்.

கனிஷ்ட சிரேஷ்ட பிரிவினருக்கான தேசிய மட்ட வலுதூக்கல் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை சிலாபம் நகர அறக்கட்டளை உள்ளக அரங்கில் நடைபெற்றது.

இதில் வி.கே. அக்கடமியைப் பிரதிநிதித்துவம் செய்த கனிஷ்டருக்கான போட்டியில் அபிசன் இரண்டு வெண்கலப்பதக்கமும், பிரதீப் ஒரு வெள்ளிப்பதக்கமும் சிரேஷ்டருக்கான போட்டியில் சாதனா இரண்டு வெண்கலப் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டனர். (3-90)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரம்

# கோட்டாவின் நீதிமன்ற கோரிக்கை சந்தேகங்களை அதிகரிக்கிறது

### நஜீத் இந்திக்க எம்.பி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் தற்போது மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதில் தற்போதைய அரசாங்கத்தின் தலையீடுகள் எதுவும் இல்லை என்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நஜீத் இந்திக்க தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில்,

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்த விசாரணைகளை அரசாங்கமாகிய நாங்கள் செய்யவில்லை என்றும், அதனை விசாரணை அதிகாரிகளும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுமே சுயாதீனமாக மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தன்னை கைது செய்ய வேண்டாம் எனக்கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நீதிமன்றத்தை நாடியுள்ளமையானது, தமக்கு மட்டுமல்லாது நாட்டின் சாதாரண பொது மக்களுக்கும் அவர் மீது ஒரு பலத்த சந்தேகத்தை தோற்றுவித்துள்ளது.

தாக்குதலுடன் எவ்வித தொடர்பும் இல்லாத ஒரு நபர், "என்னை கைது செய்ய வேண்டாம்" என்று நீதிமன்றத்திற்கு செல்ல வேண்டிய அவசியம் இல்லை என்றும், அப்படியென்றால் இதில் ஏதோவொரு தொடர்பு இருக்க வேண்டும் என்றே எண்ணத் தோன்றுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

திருடன் பிடிபடுவதற்கு முன்னர் அவசரமாக தப்பியோட முயல்வதைப் போன்ற ஒரு கிராமத்துப் பழமொழிக்கு அமைவான உதாரணமாகவே இந்த நடவடிக்கை அமைந்திருப்பதாக அவர் சாடினார். (நி)

## பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி ஓகஸ்ட் முதல் வாரத்தில் வெளியாகும்

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

2025/2026 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக மாணவர் அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் வெளியாகும் திகதி குறித்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி குறித்த வெட்டுப்புள்ளிகள் ஓகஸ்ட் முதல் வாரத்தில் வெளியிடப்படும் என அந்த ஆணைக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் வசந்த லியனகே தெரிவித்துள்ளார்.

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மொத்தம் 92,043 மாணவர்கள் அரச பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரச பல்கலைக்கழகங்களில் மாணவர் அனுமதிக்காக 42,937 மாணவர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக வசந்த லியனகே சுட்டிக்காட்டினார். (நி)

## உயிர்த்த ஞாயிறு விசாரணைகளை தடுக்க முயற்சி

### சமூக ஊடகங்களில் பரப்பப்படும் போலி குற்றச்சாட்டுகள்

### அருட்தந்தை சிறில் காமினி



(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தற்போது முறையான வகையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அதன் முன்னேற்றத்தை தடுக்கும் நோக்கில் சில தரப்பினர் செயற்பட்டு வருவதாகவும் இதற்காக சமூக வலைத் தளங்கள் ஊடாக திட்டமிட்ட வகையில் போலியான குற்றச்சாட்டுகள் பரப்பப்படுவதாகவும் அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார்.

மேலும் குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக சானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோருக்கு பதவிகளை வழங்குமாறு கத்தோலிக்க திருச்சபை எவ்வித கோரிக்கையும் விடுக்கவில்லை எனவும் அவர் தெளிவுபடுத்தினார்.

அத்துடன் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவியில் இருந்த காலத்திலேயே சந்தேக நபரான இப்ராஹிம் விடுவிக்கப்பட்டதுடன், அவரது சகோதரரின் சொத்துக்களும் விடுவிக்கப்பட்டதாக அருட்தந்தை சிறில் காமினி குறிப்பிட்டார்.

இந்த விடயம் தொடர்பாக உண்மைக்கு புறம்பான அல்லது முரண்பட்ட கருத்துக்களை வெளியிடுவது நீதிமன்றத்தை அவமதிப்பதற்கு ஒப்பானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் தரப்பினர் அதற்கான ஆதாரங்களுடன் நீதிமன்றத்தை நாட முடியும் எனவும் அருட்தந்தை சிறில் காமினி தெரிவித்தார். (நி)

## வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம் மே மாதத்தில் அதிகரிப்பு

(கொழும்பு)

2025 மே மாதத்தில் பெறப்பட்ட 641.7 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில், 2026 மே மாதத்தில் தொழிலாளர்கள் அனுப்பிய பணவரவுகளாக 847 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை பெற்றுள்ளது. இது 32% அதிகரிப்பு என்றும் இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2025 டிசம்பரில் பெறப்பட்ட சாதனை அளவான 879.1 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குப் பிறகு, 2026 மே மாதத்தில் பெறப்பட்ட இந்தத் தொகை, நாட்டின் வரலாற்றில் பதிவுசெய்யப்பட்ட இரண்டாவது மிக உயர்ந்த மாதாந்திரப் பணப் பரிமாற்றமாகும்.

2026 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில், இலங்கை 3.9 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச் செலாவணி வருவாயைப் பெற்றது.

இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் பதிவான 3.10 பில்லியன் அமெரிக்க டொலரை விட 26% அதிகமாகும்.

இந்த ஆண்டு ஐக்கிய அரபு அமீரகத்திலிருந்துதான் அதிகபட்ச பணப் பரிமாற்றங்கள் வந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (நி)

## எரிபொருள் விலைகள் குறைவடையலாம்-நளிந்த



(கொழும்பு)

அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையிலான உடன்படிக்கையைத் தொடர்ந்து உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை குறைந்து வருகிறது.

இதன் பின்னணியில், உள்நாட்டிலும் மக்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடிய முதல் சந்தர்ப்பத்திலேயே எரிபொருள் விலையைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இருப்பினும், உலக சந்தையில் நிலவும் தற்போதைய நிச்சயமற்ற தன்மை காரணமாக, விலை குறைக்கப்படும் குறிப்பிட்ட காலப்பகுதியை தற்போதைக்கு உறுதியாகக் கூற முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"அமெரிக்காவிற்கும் ஈரானுக்கும் இடையில் இன்னும் இறுதி உடன்பாடு எட்டப்படவில்லை. ஒருவித நிச்சயமற்ற நிலைமையே இன்னும் நீடிக்கிறது. இந்த மாதத்துக்காக முற்பதிவு செய்யப்பட்ட அனைத்து எரிபொருள் கப்பல்களும் ஏற்கனவே நாட்டை வந்தடைந்துள்ளன. இன்னும் ஒரு மசகு எண்ணெய் கப்பல் மாத்திரமே வர வேண்டியுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் தரப்பினர் இந்த உடன்படிக்கையில் கையெழுத்திடும் பணிகள் நாளை வெள்ளிக்கிழமைக்குள் உத்தியோகபூர்வமாக நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

வெள்ளிக்கிழமை இந்த உடன்படிக்கை கையெழுத்தான பின்னர் உலகப் பொருளாதார நிலைமை சாதகமான முறையில் மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்தச் சாதகமான சூழ்நிலையின் நல்ல பலன்கள் எமது நாடு போன்ற நாடுகளுக்கும் கிடைக்கும் பட்சத்தில், அதன் நன்மைகள் நிச்சயமாக மக்களுக்கு வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் 100 மில்.டொலர் நிதியுதவி

(கொழும்பு)

மத்திய கிழக்குப் பிராந்திய நெருக்கடியால் ஏற்பட்ட பொருளாதார நிச்சயமற்ற நிலை மற்றும் அண்மைய காலநிலை தொடர்பான இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்தை கருத்தில் கொண்டு, ஆசிய அபிவிருத்தி வங்கி, மேலதிக நிதியுதவியாக இலங்கைக்கான 100 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க முன்வந்துள்ளது.

இதன் மூலம், முன்னர் ஒதுக்கப்பட்டிருந்த 100 மில்லியன் அமெரிக்க டொலருடன் சேர்த்து மொத்த நிதியுதவி 200 மில்லியன் அமெரிக்க டொலராக அதிகரிக்கப்படவுள்ளது.

கடந்த மார்ச் மாதத்தில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி வசதிகளின் கீழ் மொத்தம் 380 மில்லியன் அமெரிக்க டொலரைப் பெற்றுக்கொள்ள அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. அதில், வர்த்தகம், முதலீடு மற்றும் தொழிற்துறை அபிவிருத்தித் திட்டத்தின் முதல் துணைத் திட்டத்திற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், மத்திய கிழக்குப் பிராந்திய நெருக்கடியால் ஏற்பட்ட பொருளாதார நிச்சயமற்ற நிலை மற்றும் அண்மைய காலநிலை தொடர்பான இயற்கை அனர்த்தங்களின் தாக்கத்தை கருத்தில் கொண்டு, மேலும் 100 மில்லியன் அமெரிக்க டொலர் கூடுதல் நிதியுதவியை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# யாழ். வேம்படி மாணவிக்கு விருது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி தேசிய ரீதியில் சிறந்த புத்தாக்க செயற்பாட்டிற்கான விருதினைப் பெற்றுள்ளார்.

வருடாவருடம் தேசிய ரீதியில் சிறந்த புத்தாக்குநர்களையும் புத்தாக்க செயற்பாடுகளையும் ஊக்கப்படுத்தும் வகையில் விருது வழங்கும் விழா SLASSCOM நிறுவனத் தின் ஆதரவுடன் இடம்பெற்று வருகிறது. இவ் வருடத்திற் கான விழா காலி முகத் திடல் ITC ரத்ன தீப விருந்தினர் விடுதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதில் வட மாகா ணத்திற்கான பாடசாலை ரீதியில் சிறந்த புத்தாக்கமாகவும் இவ்வருடத்திற்கான சிறந்த புத்தாக்குநராகவும் வேமபடி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த செல்வி ரூபிகா அருந்தவம் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான விருதும் சான்றித ழும் நிகழ்வில் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த மாணவி கடந்த ஜூன் 5ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட காலநிலை மாற்றத்திற்கான புதிய கண்டுபிடிப்பு போட்டியிலும் பங்குபற்றி சிறப்பு சான்றிதழ் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (8-33)

# மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனை இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த இருவர் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்

அல்லைப்பிட்டி பகுதியில் மாணவர்களுக்கு போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த கும்பல் ஒன்று தொடர்பில் ஊர்காவற்துறை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அல்லைப்பிட்டி பகுதியை சேர்ந்த இருவரைக் கைது செய்துள்ளனர் கைது செய்யப்பட்ட இருவ ரிடம் இருந்தும் 5.2 கிராம் மற்றும் 5கிராம் ஐஸ் போதைப் பொருளை பொலிஸார் மீட் டுள்ளனர்

கைது செய்யப்பட்டவர்களை ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் அண்மையில் வேலணைப் பகுதியில் இடம்பெற்ற மாட்டு திருட்டு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என தெரியவந்துள்ளது.

இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8-33)

# 'கலைஞர் விபரத்திரட்டு' நூலுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

கலைஞர் விபரத்திரட்டு நூல் வெளியீடு செய்யப்படவுள்ளமையால் சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கலைஞர்கள் தங்களுடைய விபரங்களை அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர் வேண்டு கோள் விடுத்துள்ளார்.எனவே கலைஞர்கள் மற்றும் குறித்த பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்த கலைஞர்களின் விபரங்கள் தெரிந்தவரகள் விண்ணப்பப் படிவங்களை கலாசார பிரிவில் பெற்று பூர்த்தி செய்து அனுப்பி வைக்கு மாறு பிரதேச செயலர் தெரிவித்துள்ளார். (8)

## கல்வளையான் இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் மீது பாடப்பட்ட " கல்வளையான் கவலைகள் போக்கிடுவான் " பக்திப் பாமாலை இறுவட்டு வெளியீடு, கொடியேற்ற நன்நாளான நாளைய தினம் வெளியாகவுள்ளது. மகாலிங்கம் மதீசனின் தயாரிப்பில் எஸ்.கவிதரனின் வரிகளில் ஸ்ரீ நிர்மலனின் இசையில் கலைச்செல்வன் பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8)

# சிறு கைத்தொழில் உற்பத்தி பொருட்களின் விற்பனை சந்தை

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி சமூக பொருளாதார மேம்பாட்டுக் கூட்டுறவுச் சங்கத்தின் "சிறு கைத்தொழில் உற்பத்திப் பொருட் களின் விற்பனையின் ஆரம்ப நிகழ்வு" இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு கரணவாய் செல்வாபுரம் நடராசா இல்லத்தில் நடைபெறும்.

தலைவர் தி. செல்வநாதனின் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தலைமைக் காரியாலய கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் சி. சிறிதரன் கலந்து கொள்வார். (8)

# ஊடகக் கற்கை பாட ஆசிரியர்களுக்கான விசேட செயலமர்வு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும் அரசாங்க தகவல் திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த பாடசாலை ஊடகக் கழகங்களுக்கு பொறுப் பான ஆசிரியர்கள் மற்றும் தொடர்பாடலும் ஊடகக் கற் கைகளும் பாட ஆசிரியர்களுக்கான ஒரு நாள் செய லமர்வு அண்மையில் யாழ்ப் பாண பல்கலைக் கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஆய்வுகூடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ் மாவட்ட மேல திக அரசாங்க அதிபர் க.சிவக ரன், கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது AI தொழில்நுட் பத்தின் வளர்ச்சி சகல துறைகளிலும் செல்வாக்குச் செலுத்துகிறது. இந் நிலையில் ஊடக விளங்கறிவு அவசிய மான தொன்றாகும். இது தொடர் பாக மாணவர்களுக்கு சரியான தெளிவூட்டலை ஆசிரியர்கள் வழங்க வேண்டும் என்றும், இதன் அடிப்படையிலேயே பாடசாலைகளில் ஊடகக் கழகங் கள் அமைக்கப்பட்டு செயற்படுத் தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

ஒரு ஊடகத்தின் செயற் பாடானது வெறுமனே தனது வருமானத்தை அதிகரிப்பதை மட்டுமல்லாமல் சமூக நன்மையை கருத்தில் கொண்டு அதன் ஒவ்வொரு செயற்பாடுக ளும் அமைய வேண்டும் என்றும், ஊடகத் துறையின் வளர்ச் சியானது வரவேற்கத்தக்க ஒன்றாக இருந்தாலும் அதன் சில செயற்பாடுகள் சமூக சீரழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன எனவும்,

இது தொடர்பில் சமூக ஊடகங்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும், ஊடகங்கள் வாயிலாக வெளியிடப்படும் செய்தி உண்மையானதாமாறாக அது AI தொழில்நுட்பத்தை பயன்படுத்தி உண் மை க்கு முரணாக எழுதப்பட்டுள் ளதா என்பதை பிரித்தறியும் நோக்கில் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு தெளி வினை ஏற்படுத்த வேண்டும் எனவும் தெரிவித்தார். நிகழ்வில் தொடர்ந்து அரசாங்க தகவல் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் எச்.எஸ்.கே.ஜே பண்டாரவின் விசேட உரை காணொளி ஊடாகப் பகிரப் பட்டது. இச் செயலமர்வில் யாழ். பல்கலைக்கழக ஊடகக் கற் கை கள் துறையியல் விரிவுரையாளர்கள், மாவட்ட ஊடகப் பிரிவு உத்தியோகத்தர்கள் மற்றும் தொடர்பாடலும் ஊடகக் கற்கைகளும் பாட ஆசிரியர்கள் கலந்து கொண்டிருந்தனர். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 150 | 250 | 250 | 300 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 180 | -- | 220 | -- | 330 |
| பச்சைமிளகாய் | 600 | 600 | 400 | 550 | 650 | -- | .600 |
| தக்காளி | 850 | 850 | 800 | 700 | 800 | 700 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 | 150 | 250 | 200 | 130 |
| கோவா | 300 | 250 | 350 | 260 | 300 | 250 | 200 |
| கரட் | 250 | 450 | 500 | 450 | 450 | 450 | 380 |
| பூசணி | 100 | 120 | 120 | 100 | 150 | 100 | 80 |
| புடோல் | 150 | 200 | 200 | 150 | 200 | 200 | 220 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 100 | 150 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 450 | 450 | -- | 330 |
| பெரிய வெங்காயம் | 200 | 220 | 250 | -- | 200 | 200 | - |
| பாகற்காய் | 1400 | 2300 | 2000 | 2000 | 2000 | 800 | -- |
| வெண்டக்காய் | 180 | 200 | 300 | 130 | 400 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 200 | 400 | 400 | -- | 300 |
| பயற்றங்காய் | 600 | 500 | 500 | 500 | 500 | 450 | 300 |
| லீக்ஸ் | 400 | 450 | 500 | 400 | 450 | 400 | 380 |
| பீற்றூட் | 350 | 400 | 500 | 450 | 600 | 600 | 450 |
| கறிமிளகாய் | 600 | 500 | 500 | 350 | 500 | 450 | 450 |
| முருங்கைக்காய் | 1500 | 1400 | 1500 | 1400 | 1600 | 1000 | -- |
| போஞ்சி | 650 | 600 | 600 | 600 | 800 | 600 | -- |
| கத்தரிதம்புள்ள | 200 | 120 | 300 | -- | 250 | -- | -- |
| கீரை – 1 பிடி | 120 | 50 | 150 | 80 | 100 | -- | 50 |
| தேசிக்காய் | 500 | 400 | 400 | 450 | 500 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80 | 120 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 400 | 350 | 350 | 350 | 350 | -- | 300 |
| வெங்காயப்பூ | 600 | 350 | 800 | 420 | 600 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 250 | 200 | 180 | 200 | 250 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | -- | 60 | -- | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | -- | 100 | -- | 150 |
| சாறப்பலா | -- | -- | 100 | -- | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் மீட்கப்பட்ட தங்க ஆபரணங்கள் அளவீட்டுப் பணிகள் நிறைவு என சிஐடி அறிவிப்பு



(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் இடம் பெற்ற இறுதிப் போரின் போது மீட்கப்பட்ட, 161 இலட்சம் ரூபாய் பெறுமதியான பத்தாயிரத் திற்கும் மேற்பட்ட தங்க ஆபரணங்களின் அளவீட்டுப் பணிகள் தற்போது நிறை வடைந்துள்ளதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID) நீதிமன்றத்தில் அறிவித் துள்ளது.

கொழும்பு பிரதம நீதவான் அசங்க எஸ்.போதரகம முன் னிலையில் நேற்று முன்தினம் இந்த விபரம் சமர்ப்பிக்கப்பட் டது.

இந்தத் தங்க ஆபரணத் தொகுதி தற்போது இலங்கை மத்திய வங்கியின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகவும், இவ ற்றை அளவீடு செய்து முடிப்ப தற்குச் சுமார் ஒரு வருட காலம் எடுத்ததாகவும் குற்றப் புலனா ய்வுத் திணைக்களம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதனைத் தொடர்ந்து, குறித்த தங்க ஆபரணங்கள் தொடர்பான விரிவான அறிக்கை ஒன்றை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு நீதவான், குற்றப் புலனாய்வுத் திணைக் களத்துக்கு உத்தரவிட்டுள் ளார்.

விடுதலைப் புலிகளின் முகாம்கள் மற்றும் வங்கி களிலிருந்து இவை மீட்க ப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது. (நி)

## தலைவர் கிண்ண உதைபந்தாட்டம்

# அரையிறுதிக்கு முன்னேறியது ஐக்கிய விளையாட்டுக் கழகம்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டு கழக மைதா னத்தில் இடம்பெற்று வரும் 40 வயதுக்கு மேற்பட்டோர் அணிகளுக்கிடையிலான தலைவர் கிண்ண உதைபந் தாட்ட போட்டித் தொடரின் லீக் ஆட்டத்தில் ஐக்கிய விளை யாட்டுக் கழகம் அபார வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன் னேறியுள்ளது.

வடமராட்சி சிரேஸ்ட உதைபந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் அமரர் க.சொக் கன் ஞாபகார்த்தமாக பருத்தி த்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் தலைவர் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி இடம்பெற்று வருகிறது.

குறித்த போட்டித் தொடரின் லீக் ஆட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் ஏழாம் நாளான நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு ஐக்கிய விளையாட்டு கழகம் எதிர் உடுப்பிட்டி யூத் அணிகள் மோதின. ஆரம்பம் முதலே ஐக்கிய விளையாட்டு கழகம் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய நிலையில் முதல் பாதி ஆட்ட நிறைவில் 3 : 0 என்ற கணக்கில் முன் னிலை பெற்றது. தொடர்ந்து இரண்டாவது பாதி ஆட்டத் திலும் அதிரடியாக விளை யாடிய ஐக்கிய விளையாட்டு கழகத்திற்கு உடுப்பிட்டி யூத் அணி சவாலளிக்கும் வகையில் செயற்பட்டது.



ஆட்ட நேர முடிவில் 6 : 1 என்ற கணக்கில் ஐக்கிய விளையாட்டு கழக அணி வெற்றி கொண்டது. மூன்று லீக் ஆட்டங்களில் இரண்டு வெற்றியுடன் அரையிறுதிக்கு முன்னேறியது ஐக்கிய விளை யாட்டு கழகம்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி மூன்று கோல் களை அடித்து அணியின் வெற் றிக்கு பலம் சேர்த்த ஐக்கிய விளையாட்டு கழக வீரர் மயூரன் ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டு பதக்கம் அணிவித்து கௌரவிக் கப்பட்டார். (3-60)

# பாடசாலைச் சூழல்களில் டெங்கு தீவிரம்

(கொழும்பு)

நாட்டில் இதுவரை மேற் கொள்ளப்பட்டுள்ள டெங்கு பரி சோதனைகளில், பாடசாலை வளாக சூழல்களிலேயே டெங்கு நுளம்பு குடம்பிகள் உரு வாகும் இடங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளதாக அமைச்சர வைப் பேச்சாளரும் அமைச்சரு மான நளிந்த ஜயதிஸ்ஸ தெரி வித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அது தொடர்பில் விளக்கமளித்துள்ள அமைச்சர், இதுவரை மேற்கொள்ளப் பட்டுள்ள பரிசோதனைகளில் பாடசாலை வளாகங்களிலேயே 41 வீதமான டெங்கு சூழல் பதிவாகியுள்ளது என்றும் அமை ச்சர் தெரிவித்துள்ளார். அதனைத் தவிர டெங்கு நுளம்புகள் பெரு கும் இடங்களாக சமய வழிபா ட்டுத் தலங்கள்: 28%, தொழிற் சாலைகள் சார்ந்த இடங்கள்: 26% என பதிவாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(நி)

# ஜோன்ஸ்மனின் ஹோட்டலில் பொலிஸார் சோதனை

(கொழும்பு)

முன்னாள் அமைச்சர் ஜோன ஸ்டன் பெர்னாண்டோவுக்குச் சொந்தமானது எனக் கூறப்படும் கொழும்பு 2, லில்லி வீதியில் அமைந்துள்ள "சிட்டி ஹோட்டல்" எனும் நட்சத்திர ஹோட்டலை பொலிஸார் சுற்றிவளைத்து விசேட சோதனைக்கு உட்படுத்தி யுள்ளனர்.

அந்த ஹோட்டலில் சட்ட விரோத நடவடிக்கைகள் இடம் பெறுவதாக பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில், கோட்டை நீதவான் நீதிமன்ற த்தின் அனுமதியுடன் வலான மத்திய ஊழல் ஒழிப்பு அதிரடிப் படையினரால் இந்தச் சோதனை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 6 சட்டத்தரணி கள் கொண்ட குழுவொன்றின் மேற்பார்வையின் கீழ் சோதனை நடத்தப்பட்டபோதிலும், எவ்வித சட்டவிரோத பொருட்களோ அல் லது நடவடிக்கைகளோ கண்ட றியப்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)


## பனை அபிவிருத்திச் சபை - இலங்கை

2026.06.17 ஆம் திகதியிட்ட Daily News பத்திரிகையில் கொள்வனவுக்கான விலைமனு கோரல் விளம்பரம் பிரசுரிக் கப்பட்டுள்ளது.

எனவே தகுதியும் ஆர்வமும் உள்ள வழங்குநர்கள் குறித்த விலை மனுக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள்.

**தலைவர், பனை அபிவிருத்திச் சபை,**
**A9 வீதி நாவற்குழி கைதடி,யாழ்ப்பாணம்.**

(C-5854)





வெட்டுக்குளத்தாய்க்கு இன்று கொடியேற்றம்

சீர்மேவு யாழ்ப்பாணம் சிறப்புற்று ஓங்கும்
செழும்பதியாம் வெட்டுக்குள பதியில் மேவும்
கார் மேவு கருங்குழலி நாராயணி தான்
கலந்து மகிழ் கொடியேற்ற நாளிது காண்.
பார் மேவு பழவடியார் கூட்டம் மோதும்
நாதசுரம் தவில் சங்கு வேதம் முழங்கும்
தார் மேவு தரணி வாழ் புவனேஸ்வரியின்
மெய்ப்பதம் என்றென்றும் போற்றுவோமே

(C-5852)

ஆக்கம்- தும்பளையூர் ம.பங்கஜம்



# பகிரங்க ஏல அறிவித்தல்- 2026
# வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் இறைச்சிக் கடைகளை 2026.07.01 ஆம் திகதி தொடக்கம் 2026.12.31 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலம் கோரப்படுகின்றது.

**இடம்: தலைமை அலுவலகம், வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்**
**திகதி: 2026.06.24 (புதன்கிழமை)**
**நேரம்: மு.ப.10.00 மணி**

| இல | விபரம் | மீளளிக்கப்படாத ஏல வைப்பு | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|
| மானிப்பாய் பட்டின உபஅலுவலகம் | | | | |
| 1 | மானிப்பாய் பொதுச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 33,250.00 | 3,500.00 |
| 2 | மானிப்பாய் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 500.00 | 247,000.00 | 3,500.00 |

1. ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் தேசிய அடையாள அட்டையையும் அதன் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்பட பிரதியையும் கொண்டு வருவதுடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத பதிவுக்கட்டணம் ரூபா.500.00 இனை சபையின் தலைமை அலுவலகத்தில் 2026.06.24 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் செலுத்தி ஏலத்தில் பங்கு கொள்ளலாம்.

2.சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை குறிப்பிடப்படும் காலப்பகுதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ள வேண்டும்.

3.பிரதேசசபையின் மேலதிக நிபந்தனைகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

4.ஏலம் சம்மந்தமான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகம், உப அலுவலகங்களில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(C-5853) 18.06.2026


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பாரதம்

### இராணுவமே வெளியேறு!

# ஆக்கிரமிப்பு காஷ்மீரில் வெடித்தது மக்கள் புரட்சி




(இஸ்லாமாபாத்)

மின்கட்டண உயர்வு மற்றும் கோதுமை விலை உயர்வுக்கு எதிராக, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் தொடங்கிய மக்கள் போராட்டம், தற்போது அரசுக்கு எதிரான மிகத் தீவிரமான அரசியல் புரட்சியாக உருவெடுத்துள்ளது.

கடந்த 2 ஆண்டுகளாக பாகிஸ்தானின் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் அவ்வப்போது போராட்டங்கள் நடந்து வந்தன. பாகிஸ்தான் அரசு விதித்த மின் கட்டண உயர்வு, விண்ணைத் தொட்ட உணவுப் பொருட்களின் விலை மற்றும் பாரபட்சமான பொருளாதார கொள்கைகளுக்கு எதிராக மக்கள் வீதியில் இறங்கினர்.

மக்களின் இந்த விஸ்வரூப போராட்டத்தை கண்டு அஞ்சிய பாகிஸ்தான் அரசு, கோதுமை மானியம் மற்றும் மின் கட்டண குறைப்பு உள்ளிட்ட சில சலுகைகளை அறிவித்தது. ஆனால், இந்த கண் துடைப்பு சலுகைகள் எங்களுக்கு வேண்டாம் எங்களுக்குத் தேவை அரசியல் சுதந்திரமும், எங்கள் வளங்கள் மீதான உரிமையும்தான், என போராட்டக்காரர்கள் அதிரடியை தொடங்கியுள்ளனர்.

கூட்டு அவாமி அதிரடி குழு என்ற பெயரில் ஒருங்கிணைக்கப்பட்ட போராட்டத்தை ஒடுக்க இராணுவம் களமிறக்கப்பட்டது. இதற்கு எதிராக ராவலகோட்டில் நேற்று பிரமாண்ட கூட்டம் நடத்தப்பட்டது.

அதில், அக்குழு தலைவர் சர்தார் அமன் பேசியதாவது:


பாகிஸ்தான் இராணுவம்திட்டமிட்டு எங்கள் பகுதிக்கு வரும் உணவுப் பொருட்களையும், ரேஷன் விநியோகத்தையும் தடுத்து நிறுத்துகிறது. எங்களை பொருளாதார ரீதியாக ஒடுக்கப் பார்க்கிறார்கள்.

எங்களின் நீர் வளத்தையும், இயற்கை வளங்களையும் பாகிஸ்தான் அரசு பகிரங்கமாக கொள்ளையடித்து செல்கிறது. ஆனால், இங்கு எந்தவொரு வளர்ச்சித் திட்டத்தையும் அவர்கள் செய்வதில்லை.

இந்தியாவிடமிருந்து எங்களை பாதுகாப்பதாக பாகிஸ்தான் இராணுவம் நாடகமாடத் தேவை இல்லை. இந்தியாவை எதிர்கொள்வது எங்கள் பிரச்சினை, அதில் தலையிட பாகிஸ்தானுக்கு எந்த உரிமையும் இல்லை. எங்கள் நாட்டை விட்டு பாகிஸ்தான் இராணுவம் வெளியேற வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.(3)

# லெபனானையு...

# அமைதி...



மேற்காசிய நாடான ஈரான் மற்றும் அமெரிக்கா இடையேயான அமைதி ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது.

ஐரோப்பிய நாடான சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில், நாளை ஒப்பந்தம் கையெழுத்தாக உள்ளது.

அமைதி ஒப்பந்தம் குறித்து ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி கூறியதாவது:

அமைதி ஒப்பந்தம் என்பது, லெபனான் மீதான இஸ்ரேல் தாக்குதலை முடிவுக்கு கொண்டு வருவதும் அடங்கும்.

லெபனானை ஆக்கிரமித்துள்ள இஸ்ரேல் படைகள், அங்கிருந்து வெளியேறாவிட்டால், போர்

## லெபனான் விவகாரத்தில் நெதன்யாகு பொறுமையை கடைப்பிடிக்க வேண்டும்

# ட்ரம்ப் கடும் எச்சரிக்கை

(வோஷிங்டன்)

ஐரோப்பிய நாடான பிரான்ஸில், "ஜி - 7" உச்சி மாநாடு நடந்து வருகிறது. மாநாட்டிற்கு இடையே, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியதாவது:



லெபனானில் ஹிஸ்புல்லாவுக்கு எதிராக மிக நீண்ட காலமாக இஸ்ரேல் போரிட்டு வருகிறது. இதில் ஏராளமான அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள்.

நீங்கள் ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்த ஒருவரை தேடும்பொழுது எல்லாம் ஒரு அடுக்குமாடி குடியிருப்பை இடிக்க வேண்டிய அவசியமில்லை. அந்தக் குடியிருப்பில் பொது மக்கள் தான் அதிகளவில் இருக்கின்றனர்.

இஸ்ரேலால் பெருமளவிலான உயிரிழப்புகளை தவிர்க்க முடியாவிட்டால், அந்தப் பணியை சிரியாவிடம் ஒப்படைத்தால் அவர்கள் ஹிஸ்புல்லா அமைப்பை இன்னும் சிறப்பாக கையாளுவர்.

சிரியாவின் புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றுள்ள அகமது அல் - ஷரா என்னால் அங்கு கொண்டு வரப்பட்டவர். அவர் நாட்டை மிக விரைவாக ஒன்றிணைத்துள்ளார். அவர் மிக வும் திறமையானவர்.

இஸ்ரேல் பிரதமருடன் எனக்கு நல்ல உறவு உள்ளது. அதே சமயம் அமெரிக்கா இல்லை என்றால் இஸ்ரேல் என்ற நாடே இருந்திருக்காது. ஆகவே, லெபனான் விவகாரத்தில் நெதன்யாகு இன்னும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். (3)

## அமெரிக்காவின் பொருளாதா... கியூபாவில் கடும் மருத்துவ...

(ஹவானா)

அமெரிக்கா விதித்துள்ள கடுமையான எரிசக்தி மற்றும் பொருளாதாரத் தடையால், கியூபா நாட்டில் வரலாறு காணாத மருத்துவ மற்றும் உணவு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அங்கு புற்றுநோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உயிர்பிழைப்பு விகிதம் 85 சதவீதத்தில் இருந்து 65 சதவீதமாக குறைந்துள்ளதாக கியூபா அரசு கவலை தெரிவித்துள்ளது.

போதிய மூலப் பொருட்கள் இல்லாததால் 300 அத்தியாவசிய மருந்துகள் தயாரிக்க முடியாமல் முடங்கியுள்ளன.

மேலும், ஒரு இலட்சம் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த தினசரி பால் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளதுடன், 16 வகையான குழந்தை தடுப்பூசித் திட்டமும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ...யும் உள்ளடக்கியதே ...தி ஒப்பந்தம்

## ஈரான் அதிரடி



**(டெஹ்ரான்)**

**போர் முடிவுக்கு வருவது என்பது லெபனான் மீதான இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு முடிவுக்கு வருவதையும் உள்ளடக்கியதே என ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார்.**

முழுமையாக முடிவுக்கு வந்ததாக அர்த்தமில்லை. லெபனான் மீது இஸ்ரேல் நடத்தும் தாக்குதல்கள், ஒப்பந்தத்தை மீறும் செயலாகவே கருதப்படும் எனக் கூறினார்.

இறுதி ஒப்பந்தத்தில் லெபனான் விவகாரம் இடம் பெற்றுள்ளதா என்பது குறித்து அமெரிக்கா இது வரை வெளிப்படையாக எதுவும் கூறவில்லை. அதே நேரத்தில், லெபனானில் இருந்து செயற்படும் ஹிஸ்புல்லா பயங்கர வாத அமைப்பிடம் இருந்து தற்காத்துக் கொள்ள இஸ்ரேலுக்கு முழு உரிமை உண்டு என்று ஏற்கனவே அமெரிக்கா தெரிவித்திருந்தது.

இதற்கிடையே, "ஈரான் - அமெரிக்க ஒப்பந்தத்தில் இஸ்ரேல் நேரடி பங்குதாரர் இல்லை.

அதனால், லெபனானில் இருந்து இஸ்ரேலிய படைகளை திரும்ப பெறும் பேச்சுக்கே இடமில்லை" என, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார். (3)

## அமெரிக்கா - ஈரான் உடன்பாடுகள் எளிதில் சாத்தியமில்லை

### கட்டார் வெளியுறவு அமைச்சகம்

(தோகா)

அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே தற்போது விவாதிக்கப்பட்டு வரும் பிராந்தியப் பிரச்சினைகளுக்கு அவ்வளவு எளிதில் தீர்வு காண முடியாது என்று கட்டார் தெரிவித்துள்ளது.



இரு நாடுகளுக்கும் இடையேயான பேச்சு வார்த்தையில் பரஸ்பர ஆக்கிரமிப்பு தவிர்ப்பு ஒப்பந்தங்கள், அரசு சாரா ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் மற்றும் அணுசக்தி திட்டங்கள் உள்ளிட்ட முக்கிய விவகாரங்கள் தற்போதைய முரண்பாடுகளாக நீடித்து வருவதாகக் கட்டார் குறிப்பிட்டுள்ளது.

இது குறித்து தோஹாவில் செய்தியாளர்களிடம் பேசிய கட்டார் வெளியுறவு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் மாஜெத் அல்-அன்சாரி, "பிராந்தியப் பாதுகாப்பை நோக்கிய சரியான பாதையில்தான் நாம் இப்போது பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

எதிர்காலத்தில் பல சவால்கள் காத்திருந்தாலும், தற்போதைய சாதகமான சூழலை நாம் நம்பிக்கையுடன் அணுக வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

மேலும், ஹார்முஸ் நீரிணைப் பகுதி, பிராந்தியப் பாதுகாப்பு, அண்டை நாடுகளுடன் ஈரானின் நல்லுறவு மற்றும் பல தசாப்தங்களாக இப்பகுதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வரும் ஈரானின் ஏவுகணைத் திட்டங்கள் மற்றும் ஆதரவுக் குழுக்கள் போன்ற பல்வேறு சிக்கலான விவகாரங்கள் குறித்து இரு தரப்பும் விரிவாகப் பேசி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்தகைய ஆழமான மற்றும் நீண்டகாலப் பிரச்சினைகளை வெறும் சில நாட்களில் பேசித் தீர்த்துவிட முடியாது என்றும், பிராந்தியத்தில் முழுமையான அமைதியை நிலைநாட்ட இன்னும் தொடர் முயற்சிகள் தேவைப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (3)

## ...தாரத் தடையால் ...துவ நெருக்கடி

ஆபத்தில் உள்ளது.

சுமார் ஒரு இலட்சம் மக்கள் அறுவை சிகிச்சைக்காக காத்திருப்பு பட்டியலில் உள்ளனர்.

அமெரிக்காவின் தடையால் ஐ.நா.வின் அவசர உணவு மற்றும் மருந்துப் பொருட்களும் கியூபாவிற்குள் வர முடியாமல் எல்லையிலேயே முடங்கியுள்ளன.

இதனால் கியூபா மக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்காவின் பொருளாதார தடை மற்றும் அத்தியாவசிய பொருட்கள், குறிப்பாக சுகாதாரத் துறையில் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் இருந்த போதிலும், கியூபா தனது தேசிய அறிவியல் மற்றும் மருத்துவ வளர்ச்சியை தொடர்ந்து முன்னெடுத்து வருவதாக கியூபாவின் வெளியுறவு அமைச்சர் புருனோ ரோட்ரிக்ஸ் தெரிவித்துள்ளார். (3)

## உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவர ஜி-7 நாடுகளின் தலைவர்கள் இணக்கம்

(கீவ்)

உக்ரைனுக்கு எதிரான போரை ரஷ்யா உடனடியாக நிறுத்த வலியுறுத்தி, அதன் மீதான பொருளாதாரத் தடைகளையும் அழுத்தங்களையும் தீவிரப்படுத்த பிரான்சில் கூடியுள்ள ஜி-7 உலக வல்லரசு நாடுகளின் தலைவர்கள் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

இம்மாநாட்டின் இடையே உக்ரைன் ஜனாதிபதியை நேரில் சந்தித்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ரஷ்யா இனிமேலும் பிடிவாதம் பிடிக்காமல் "சமாதான உடன்படிக்கையை செய்ய வேண்டும்" என வலியுறுத்தியுள்ளார்.

முதலாம் உலகப் போரை விடவும் நீண்டு கொண்டே செல்லும் இந்த உக்ரைன் போர்க்களத்தில், உக்ரைன் படைகள் வலுவாக எதிர்கொண்டு நின்றபோதிலும், ரஷ்யாவின் ஏவுகணைத் தாக்குதல்களால் உக்ரைன் நகரங்கள் தொடர்ந்து பேரழிவைச் சந்தித்து வருவதை ஜெலென்ஸ்கி உலகத் தலைவர்களிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இம்மாநாட்டின் பின்னணியில் பிரான்ஸ் இராஜதந்திர வட்டாரங்கள் வெளியிட்ட தகவலின்படி, ரஷ்யாவின் பிரதான வருவாய் ஆதாரங்களான மசகு எண்ணெய் மற்றும்




இயற்கை எரிவாயு விநியோகத்தின் மீது மேலும் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதிக்க ஜி-7 தலைவர்கள் தீர்மானித்துள்ளனர்.

பிரித்தானியப் பிரதமர் கீர் ஸ்டார்மர், ரஷ்யாவின் திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயுவை ஏற்றிச் செல்லும் பிரம்மாண்ட கப்பல்கள் மீது புதிய தடைகளை அறிவித்துள்ளார்.

அத்துடன் கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி ரஷ்யா தனது எரிபொருள் மீதான மேற்கத்திய தடைகளைத் தவிர்ப்பதற்காகப் பயன்படுத்தும் "நிழல் கப்பல் படை" சார்ந்த 160 நிறுவனங்களுக்கு எதிராகப் புதிய தடைகளை விதித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# குருநகர் தொடர்மாடி குடியிருப்பிற்கு வீடமைப்பு பிரதி அமைச்சர் கள ஆய்வு



(யாழ்ப்பாணம்)

வீடமைப்பு நிர்மாணிப்பு மற்றும் நீர் வழங்கல் பிரதி அமைச்சர் டீ.பி சரத் நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட குருநர் தொடர்மாடி குடியிருப்புக்கு களவிஜய மொன்றை மேற்கொண்டு, அங்குள்ள மக்களுடனும், தொடர்மாடி முகாமைக் குழுவுடனும் கலத்துரையாடினார்.

தொடர்மாடி குடியிருப்பின் வீடுகளை பார்வையிட்ட பிரதி அமைச்சர் சேதம டைந்த கட்டடங்களை பார்வையிட்டு, தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவ னத்தினை விரைவில் ஆய்வுக்கு அனு ப்பி அதன் அறிக்கையினைப் பெற்று தேவையான அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக மக்களிடம் தெரிவித்தார்.

மேலும், தொடர்மாடிக் குடியிருப்புக்கு கழிவகற்றல் திட்டத்திற்காக 130 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்ட நிலையில், அதன் தற்போதைய முன்னேற்றத்தி னையும் பிரதி அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

குறித்த களவிஜயத்தில் பாராளுமன்ற உறுப்பினர் க. இளங்குமரன், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைப்பாளர் எஸ்.கபிலன், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் திருமதி சிவகாமி உமாகாந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு:1994- இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>7இல்செவ்<br>கி-பா-69 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்-A/L,Dubai<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16945 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்-பூசம்<br>கி.பா -30 ¾<br>10இல்சூரிசெவ்<br>உயரம்-5'2"<br>தகைமை/தொழில்: BSC,Engineer<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/16946 |
| பிறப்பு:1992- இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>8இல்செவ்<br>கி-பா- 26 ½<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்-O/L, Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16947 | பிறப்பு-1987-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி-பா-16 1/2<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: College,Bsc, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/16957 |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்- உத்தரட்டாதி<br>7இல்செவ்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்-O/L,Business<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16948 | பிறப்பு-1998-RC<br>நட்சத்திரம்- அவிட்டம்<br>10இல்சூரிசெவ்<br>உயரம்-5'6"<br>தகைமை/தொழில்:Web Developer<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16959 |
| பிறப்பு: 1996- இந்து<br>நட்சத்திரம்:உத்தரம்<br>உயரம்:5"<br>தகைமை/தொழில்-A/L, Cash Officer(pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16949 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்:ரேவதி<br>2இல்செவ்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HNDA, Cashier (America)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16961 |
| பிறப்பு: 1995- இந்து<br>நட்சத்திரம்:உத்தரட்டாதி<br>7இல்செவ்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்: A/L,France<br>எதிர்பார்ப்பு: PR உள்ளவர்<br>தொ.இ: B/16950 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்:ரோகினி<br>கி-பா-01 உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BSC,MPhil, Assistant Lecturer<br>எதிர்பார்ப்பு: உயர்பதவிகள்<br>தொ.இ: G/16962 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 601

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



## வெற்றியின் இரகசியம்!

சில பேருக்குத் தொட்டதெல்லாம் வெற்றியாக முடியும். சில பேருக்குத் தொட்டதெல்லாம் தோல்வியாக முடியும்!

இதிலே உள்ள இரகசியம் என்ன?

அதைத் தெரிஞ்சுக்கணும் என்றால் இந்தக் கதையை கேளுங்கள்.

ஜப்பானிலே ஒரு பெரிய வீரர் இருந்தார். அவர் பெயர் நொபுநாகா. அவரிடம் இருந்த படை வீரர்கள் கொஞ்ச பேர்தான்!

சிறிய படைப் பலத்தை வைத்துக்கொண்டு பெரிய பெரிய படைகளையெல்லாம் முறியடிச்சிருக்கார் அவர். அவ்வளவு சாமார்த்தியம் உள்ளவர்.

ஒரு தடவை எதிரி மீது படையெடுத்துப் போயிருக்கார். அப்போது அவருடைய படை வீரர்களுக்கும், தளபதிக்கும் ஒரு சந்தேகம் வந்துவிட்டது.

இந்த போரிலே நாம் வெற்றிபெற முடியுமா? என்கின்ற சந்தேகம்.

இருந்தாலும் இதை எப்படி தலைவரிடம் தெரிவிக்கிறது என்று ரொம்ப யோசனை செய்தார்கள். கடைசியா கொஞ்சம் துணிச்சலை வரவழைத்துக்கொண்டு மெதுவா கேட்டுவிட்டார்கள்.

அவர் பார்த்தார். சரி அதை நாம் முடிவு செய்யவேண்டாம். புத்த விகாரத்துக்குப் போவோம். பூவா தலையா போட்டுப் பார்ப்போம் என்ன வருதோ அதன்பிரகாரம் செயற்படுவோம். என்ன சொல்கிறீர்கள். ஏன் என்றால் போருக்குச் செல்லும் போது முழு மனசோட போகணும்.

தளபதியும் படைவீரர்களும் சரி என்று ஒத்துக்கொண்டார்கள். உடனே அவர்கள் எல்லோரும் அங்கே பக்கத்துலே இருந்த கோயிலுக்குப் போனார்கள்.

தலைவர் உள்ளே போனார். எல்லாரும் ஆவலோட வெளியிலே காத்துக்கொண்டிருந்தாங்கள். ரொம்ப நேரத்துக்கு அப்பறம் அவர் வெளியிலே வந்தார்.

தளபதி -துணைத் தளபதிகள் எல்லாரையும் அருகிலே கூப்பிட்டார்.

அவர்கள் முன்னிலையிலே ஒரு தங்கக் காசை எடுத்தார்.

இதோ பாருங்கள். இப்ப பூவா ? தலையா ? போட்டுப் பார்க்கலாம். பூ வந்தா தோற்றுவிடுவோம். தலை வந்தா ஜெயிச்சிடுவோம். பூ விழுந்தா போர் வேணாம். அதைத் தவிர்த்துவிடுவோம். தலை விழுந்தால் போருக்குப் போவோம். விதி இப்போ நம்ம கையிலே தான் இருக்கு. இங்கே என்ன தீர்ப்பு கிடைக்குதோ அதன்படி நடப்போம்! அப்படின்னு சொல்லிவிட்டு தங்கக் காசை சுண்டினார். அது சுழன்று மேலே போய் "கணீர்" என்று தரையிலே விழுந்தது. எல்லாரும் ஆவலோட அதைக் குனிந்து பார்த்தார்கள். தலை விழுந்திருந்தது!

ஒரே மகிழ்ச்சி ஆரவாரம். அதுக்கப்புறம் அவங்களுக்குச் சந்தேகம் வரவில்லை. உறுதியான முடிவோடு போருக்குப் போனார்கள். வெற்றியோடு திரும்பி வந்தார்கள்.

வெற்றிவிழா நடக்குது. தளபதி பேசினார். இந்த வெற்றியை காசுதான் முடிவு செய்தது. அதனாலே விதியை வெல்ல யாரால் முடியும்? என்று சொல்லிவிட்டு உட்கார்ந்தார். அப்போ அந்தத் தலைவர் தன்கிட்டே இருந்த அந்தத் தங்கக் காசை எடுத்து இரகசியமா தளபதியிடம் கொடுத்தார்.

தளபதி அதை வாங்கிப் பார்த்தார். அந்த நாணயத்திலே இரண்டு பக்கமும் தலைதான் இருந்ததாம்! இதுலேயிருந்து என்ன தெரியுது?

வெற்றியின் இரகசியம் என்ன? மனஉறுதிதான்.

எதைச் சொன்னாலும் மனக் குழப்பம் இருக்கக் கூடாது "எண்ணிக் துணிக கருமம்!" இது வள்ளுவர் வாக்கு,

பரீட்சை பெறுபேறு வரும் சமயம். ஒரு பையன் ஒரு காசைச் சுண்டிப் போட்டு தலையா பூவா என்று பார்த்துக் கொண்டிருந்தான்.

என்ன பாஸா- பெயிலா என்று பார்க்கின்றாயா? என்று கேட்டேன்.

பரீட்சை பெறுபேற்றைப் பொறுத்தவரைக்கும் எனக்குச் சந்தேகமில்லை சார் என்றான்

அப்புறம் எதுக்கு இது? என்று கேட்டேன்.

பெறுபேறு வந்த பிறகு எங்க அப்பா என்னைத் திட்டுவதோடு விட்டுவிடுவாரா.. இல்லை அடிப்பாரா என்பதைத் தெரிந்துகொள்வதற்காகத் தான் இது! அப்படின்னான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பதுளை பாத்திமா முஸ்லிம் மகளீர் கல்லூரியில் கல்வி கற்கும் 650 மாணவர்களிற்கான தொழில்நுட்ப இனணயத் திறனை மேம்படுத்தும் புதிய திறன் பலகை வழங்கப்பட்டுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று குறித்த திறன் பலகையை வழங்கி வைத்தார். (படம்- மகாலிங்கம்)

# வல்லிபெல் ஃபைனான்ஸ் வடக்கு மாகாணம் முழுவதும் தனது செயற்பாடுகளை விரிவுபடுத்துகிறது

வல்லிபெல் ஃபைனான்ஸ் நிறுவனம், இலங்கை முழுவதும் நிதி அணுகலை மேம்படுத்துவதற்கும் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கும் தனது அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்யும் வகையில், நெல்லியடி, புதுக்குடியிருப்பு மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் மூன்று புதிய கிளைகளைத் திறந்து, நாடு தழுவிய தனது இருப்பை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

புதிதாக திறக்கப்பட்ட கிளைகள், வடக்கு தீபகற்பத்தில் உள்ள தனிநபர்கள், தொழில்முனைவோர் மற்றும் வணிகங்களுக்கு விரைவான மற்றும் அணுகக்கூடிய நிதி தீர்வுகளை வழங்குவதன் மூலம் வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. விரிவாக்கமானது Vallibel Finance இன் மூலோபாய வளர்ச்சிப் பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது, குறிப்பாக வடக்கு மாகாணத்திற்குள், பிராந்திய பொருளாதார முன்னேற்றத்திற்கு ஆதரவளிக்கும் அதேவேளையில் உள்ளூர் சமூகங்களுடனான தனது ஈடுபாட்டை நிறுவனம் தொடர்ந்து ஆழப்படுத்துகிறது.

விரிவடைந்து வரும் கிளை வலையமைப்பின் மூலம், வல்லிபெல் ஃபைனான்ஸ் நிறுவனம் குத்தகை, நிலையான வைப்புத்தொகைகள், தங்கக் கடன்கள் மற்றும் தானியங்கிப் பண எடுப்பு வசதிகள் உள்ளிட்ட விரிவான நிதித் தீர்வுகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.

நவீன தொழில்நுட்ப உட் கட்டமைப்பு மற்றும் வாடிக்கையாளரை மையமாகக் கொண்ட சேவைத் தரங்களின் ஆதரவுடன், வாடிக்கையாளர் களின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப தடையற்ற மற்றும் திறமையான நிதிச் சேவைகளை வழங்குவதை இந் நிறுவனம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

# நாடு முழுவதும் 3000 இற்கும் மேற்பட்ட டிரக்டர்களை வலுவூட்டிய பிரவுன்ஸ் டிரக்டெக் சேவை முகாம்

எமது நாட்டின் பாரம்பரிய விவசாயத்தை நவீன தொழில்நுட்பத்தின் மூலம் மேம்படுத்துவதில் முன்னோடியாகத் திகழும் பிரவுன்ஸ் நிறுவனம் ஒரு பெருமைமிக்க பாரம்பரியத்தைக் கொண்டுள்ளது.

இலங்கை மண்ணுக்கும் நெல் வயல்களுக்கும் ஏற்ற தொழில்நுட்ப மாற்றங்கள், நமது காலநிலையைத் தாங்கும் வலிமை மற்றும் நமது விவசாயிகளின் குறிப்பிட்ட தேவைகள் போன்ற பல கார்ணிகளில் பிரவுன்ஸ் விவசாயப் பிரிவு நிபுணத்துவம் பெற்றுள்ளது. இந்தக் காரணங்களினாலேயே, பல தசாப்தங்களாக நாடு முழுவதும் பிரவுன்ஸ் நிறுவனத்துடன் நம்பிக்கையுடன் இணைந்துள்ள டிரக்டர் வாடிக்கையாளர் களின் வலைப்பின்னல் மிகப்பெரியது.

உயர்தர டிரக்டரை வழங்குவதன் மூலம் மட்டும் விவசாயிகளின் தேவைகள் பூர்த்தியாகிவிடாது. டிரக்டர் போன்ற கடினமான பயன்பாட்டைக் கொண்ட விவசாய தொழில்நுட்ப உபகரணங்களுக்கு விற்பனைக்கு பிந்தைய சேவை மிகவும் முக்கியமானது. அந்த குறிப்பிட்ட தேவையை நன்கு உணர்ந்து கொண்டதாலேயே பிரவுன்ஸ் டிரக்டெக் சேவை முகாம் என்ற எண்ணக்கரு உதயமானது.

டிரக்டரை சேர்விஸ் செய்வதற்கும், அதில் உள்ள குறைபாடுகளை சரிசெய்து பழுதுபார்ப்பதற்கும் வாய்ப்பளிப்பது இந்த சேவை முகாமின் முக்கியப் பணியாகும். எவ்வித தடையுமின்றி பருவம் முழுவதும் டிரக்டரிலிருந்து அதிகபட்ச வேலையைப் பெறுவதற்குத் தேவையான சரியான வழிகாட்டுதல் இங்கு கிடைக்கிறது.

சிறப்புப் பயிற்சி பெற்ற தொழில்நுட்பவியலாளர் களின் நிபுணத்துவ ஆலோசனைகள் மற்றும் சேவைகளைப் பெறமுடிவதும், அசல் உதிரிப்பாகங்களைப் பெற முடிவதும் விவசாயிகளுக்குக் கிடைக்கும் ஒரு சிறப்புச் சலுகையாகக் கருதலாம்.




விவசாயிகளின் இந்த இதயத் துடிப்பை பிரவுன்ஸ் விவசாயப் பிரிவு அறிந்திருப்பதால், தேவையான உதிரிப்பாகங்களை வீட்டிற்கே வழங்குவதுடன், ஒயில் மற்றும் உதிரிப்பாகங்களுக்கு சிறப்பு தள்ளுபடிகளை வழங்கி இந்த சேவை முகாம் இலவசமாக நடத்தப்படுகிறது. பிரவுன்ஸ் நிறுவனத்திடமிருந்து பெறப்படாத வேறு டிரக்டர் உங்களிடம் இருந்தாலும், ஒரு தேசியப் பணியின் பொறுப்பை பிரவுன்ஸ் எப்போதும் நிறைவேற்றுவதால் இந்த முகாமின் சேவை உங்களுக்கும் இலவசமாகக் கிடைக்கின்றது.

டிரக்டர் சேவைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, புதிய பிரவுன்ஸ் டிரக்டர்கள் மற்றும் அறுவடை இயந்திரங்கள் போன்ற நவீன விவசாய தொழில்நுட்ப உபகரணங்களின் அனுபவத்தைப் பெறுவதற்கும் அவற்றை எளிதாக வாங்குவதற்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இலங்கையின் முன்னணி நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பிரவுன்ஸ் நிறுவனத்துடன் கைகோர்த்து இந்த முகாமில் பங்கேற்பதால், விவசாயிகளின் தேவை மற்றும் வசதிக்கு ஏற்ப கொள்வனவுகளை மேற்கொள்ள முடியும்.

இலங்கை முழுவதும் உள்ள விவசாய நிலங்களை உள்ளடக்கும் வகையில், ஏற்கனவே இவ்வாறான 150 பிரவுன்ஸ் டிரக்டெக் சேவை முகாம்கள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 3000 இற்கும் மேற்பட்ட டிரக்டர்களையும் 45,000 இற்கும் மேற்பட்ட சேவை அமர்வுகளையும் உள்ளடக்கியிருக்க முடிந்தது பிரவுன்ஸ் விவசாயப் பிரிவு பெற்ற ஒரு சிறப்பு வெற்றியாகும்.

# இராசிபலன்

**18.06.2026**
**ஆனி 04, வியாழக்கிழமை**
**சதுர்த்தி பின்னிரவு 12.41 மணிவரை**
**பூசம் பிற்பகல் 4.59 மணிவரை**

**சுப நேரம் -7.23-8.53 மணிவரை**
**இராகு காலம் -1.23-2.53 மணிவரை**
**சதுர்த்தி விரதம், அமிர்த சித்தம், சுப முகூர்த்த நாள்**

**சந்திராஷ்டமம்- மூலம்,பூராடம்.**

**வளவன்**




மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், தொலைபேசி வழித்தகவலால் மகிழ்ச்சி தரும், பயணங்களால் பலனுண்டு.




பயணங்களால் பலனுண்டு, தொழில் நலன் கருதி ஆக்கபூர்வமான முயற்சிகள் எடுப்பீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.




எதிர்பாராத தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுப காரியம் நடைபெறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




சொந்த பந்தங்களின் வருகையுண்டு, பேச்சில் கனிவு பிறக்கும், செய் தொழில் மேன்மையுண்டு, சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் கலகலப்பான சூழ் நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள்.




திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள்.




பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு.




ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், உடல் நலன் சீராகும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள்.




உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பொன்னான நாள், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், தனவரவு திருப்தி கரமாக அமையும்.




குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.




பயணங்களால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், நீங்கள் பெரிய அளவில் மதித்த ஒருவர் அர்ப்பத்தனமாக நடந்து கொள்ளலாம், கொடுக்கல் வாங்கல்களின் கவனம் தேவை.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தாழ்ந்த சுபாவமுண்டு.

**முதுமை என்பது [illegible] அல்ல அது ஒரு பருவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

கல்கியின்


பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர்

1067





அவர் அப்பால் சென்ற சில விநாடிநேரத்துக்கெல்லாம் ஆழ்வார்க்கடியான் உள்ளே பிரவேசித்தான். "ஆம், ஆம்! தனாதிகாரி கூறியதை நான் ஆமோதிக்கிறேன். ஜோதிடத்தை நம்பினாலும், ஜோதிடக்காரர்களை நம்பவே கூடாது!" என்றான்.

**14 ஆம் அத்தியாயம்**
**வானதியின் சபதம்**

திடும் பிரவேசமாக உள்ளே புகுந்த ஆழ்வார்க்கடியானைப் பார்த்துக் குந்தவை, "திருமலை, நீ எப்படி இங்கே வந்து முளைத்தாய்? எதற்காக வந்தாய்?" என்று கேட்டாள்.

"அம்மணி! எல்லாம் இந்த ஜோசியருடைய மோசடி வார்த்தையினால்தான்! இன்று காலையில் இவரிடம் 'நான் போகும் காரியம் வெற்றிகரமாக முடியுமா?' என்று கேட்டேன். 'முடியும்' என்று சொன்னார். ஆனால் இந்த இடத்தை விட்டுச் சிறிது தூரம் போகக் கூட முடியவில்லை. காரியம் வெற்றி பெறுவது எப்படி? ஆகையினால் தான் சற்று முன் பழுவேட்டரையர் கூறியதை நான் ஆமோதிக்கிறேன். இவருடைய ஜோதிட சாஸ்திரமே ஏமாற்றா அல்லது இவர்தான் வேண்டுமென்று ஏமாற்றினாரா என்று கேட்டுத் தெரிந்து கொண்டு போக வந்தேன். பழுவேட்டரையரின் குரலை இங்கே கேட்டதும், இவர் பேரிலேயே எனக்கு சந்தேகம் ஊர்ஜிதப்பட்டது. ஆனால் தங்களை இங்கு நான் எதிர்பார்க்கவேயில்லை" என்றான். "என்னை நீ எதிர்பார்த்திருக்க முடியாது தான். நீ எதற்காக வந்தாய்? என்ன காரியம் வெற்றி அடையுமா என்று ஜோதிடரைக் கேட்டாய்? இரகசியம் ஒன்றுமில்லையே" என்றாள் இளவரசி.

"தங்களுக்குத் தெரிய முடியாத இரகசியம் இருக்க முடியும்? சக்கரவர்த்தியின் கட்டளைப்படி நேற்றிரவே முதன் மந்திரி என்னை நாகப் பட்டினத்துக்குப் போகும்படி ஏவினார். இளவரசரைக் கையோடு அழைத்து வருவதற்காகத்தான். வழியில் செம்பியன் மாதேவியைப் பார்த்து அவரிடமும் ஓர் ஓலையைக் கொடுத்துப் போகும்படி ஏவினார். தாங்கள் எப்போது தஞ்சையிலிருந்து கிளம்பினீர்கள், தேவி?"

"பொழுது விடிந்து சிறிது நேரத்துக்குப் பிறகு கிளம்பினோம். இதை ஏன் கேட்கிறாய், திருமலை?" "கொடும்பாளூர்ப் படைகள் தஞ்சைக் கோட்டையைச் சூழ்ந்து கொண்டு விட்டனவா என்று தெரிந்து கொள்வதற்காகக் கேட்டேன்." "என்ன? என்ன?"

"ஆம், தேவி! தங்களுக்குத் தெரியாதா, என்ன? நேற்றிரவு சக்கரவர்த்தியைப் பார்த்து விட்டு முதன் மந்திரி அவருடைய மாளிகைக்குத் திரும்பி வந்தபோது இரண்டு செய்திகள் காத்திருந்தன.

ஒன்றுதான், நாகைப்பட்டினத்திலிருந்து இளவரசர் புறப்பட்டு வருகிறார் பெரும் ஜனக்கூட்டம் புடைசூழ வந்து கொண்டிருக்கிறார் என்பது" "அதை நானும் இன்று காலை அறிந்தேன். என் தம்பியை இங்கே தடுத்து நிறுத்திக் கொள்வதற்காகவே புறப்பட்டு வந்தேன். இன்னொரு செய்தி என்றாயே, அது என்ன?" ஆழ்வார்க்கடியான் வானதியைச் சுட்டிக்காட்டி, "அம்மா! இந்தக் கொடும்பாளூர் இளவரசியை எதற்காக அழைத்து வந்தீர்கள்?" என்று கேட்டான்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## பள்ளிக்குச் சென்ற சிட்டுக்குருவிகள்



(16.05.2026தொடர்ச்சி)

அவள் கதறிக் கதறி அழுதாள். வான் புறப்பட்டு விட்டது. அரச மரத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிட்டுக்கள் இதைப் பார்த்தன.

உடனே, விருட்டென்று பறந்தன. அந்த வான் ஓட்டுபவனை மாறி மாறி முகத்தில் கொத்தின. அவன் பயந்து வானை நிறுத்தி விட்டான். உள்ளே சிறுமி கதறிக் கதறி அழுது கொண்டிருந்தாள்.

அவனை அடித்து அவன் அணிந்திருந்த சங்கிலி, தோடு, மோதிரம் ஆகியவற்றை இரண்டுபேர் கழற்றிக் கொண்டிருந்தார்கள். இரண்டு சிட்டுக்களும் அவர்கள் முகத்தைக் கொத்தின.

படபடவென்று சிறகடித்து அவர்கள் கண்ணில் தூசி பறக்கச் செய்தன. அவர்கள் சிட்டுக்களின் தாக்குதலால், திணறிக் கொண்டிருக்கும் பொழுது, சிறுமி வானிலிருந்து இறங்கி ஓடிவிட்டாள்.

அதற்குள், சிறுமியின் கூக்குரல் கேட்டு ஓடி வந்த பொதுமக்கள் வானில் வந்த அந்தத் திருடர்களை அடித்து உதைத்து அனுப்பினார்கள்.

மறுநாள், பள்ளியில் அந்தச் சிறுமி நடந்ததைக் கூற எல்லாப் பிள்ளைகளும் சிட்டுக்களைப் பாராட்டினர்.

சிட்டுக்களும் இது போல் எல்லோருக்கும் நல்ல உதவிகளை அவ்வப்போது செய்து வந்தன. பள்ளியில் விளையாடுவதையும், குறும்பு செய்வதையும் விட்டுவிட்டன.

அந்த மாதத் தேர்வில் எல்லாக் குழந்தைகளும் நிறைய மதிப்பெண் வாங்கினார்கள். சிட்டுக் குருவிகளும் நன்றாகத் தேர்வு எழுதி நிறைய மதிப்பெண் வாங்கின.

ஒவ்வொரு மாதமும் அவை மதிப்பெண் அறிக்கை கொண்டு வரும் போது மரத்தில் உள்ள எல்லாப் பறவைகளுக்கும் காட்டி அம்மாச் சிட்டு மகிழ்ச்சி கொள்ளும். 'என் குஞ்சுகளைப் பெரிய மருத்துவர் ஆக்கப் போகிறேன்' என்று அது அடிக்கடி சொல்லும்.

சிட்டுக்களும் அம்மாவின் ஆசையை நிறைவேற்றும் நல்ல கண்மணிகளாக விளங்கின. அந்தச் சிட்டுக்களைப் போல் சுறுசுறுப்பாகவும் பகைவருக்கு அஞ்சாத வீர முள்ளவர்களாகவும் பாடத்தை ஒழுங்காகப் படிக்கும் சிறுவர்களாகவும் நாம் இருப்போம்.

முற்றும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

அறத்தாறு இதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்

சிலப்பதிகாரத்தைத் தந்த இளங்கோவடிகள் தான் படைக்கும் காப்பியத்தின் நோக்கத்தைத் தெளிவுபடுத்துகிறார்.

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" – "ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்" – "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்".

இம் மூன்று விடயங்களையும் எடுத்துக் கூறும் பொருட்டே சிலப்பதிகாரம் எனும் செய்யுளைப் படைக்கின்றேன் என்கிறார்.

தனது இலக்கை அடையும் பொருட்டு இளங்கோ அடிகள், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் – கோவலன் – கண்ணகி ஆகிய பாத்திரங்களை எடுத்து அதனூடு கதையை நகர்த்துகின்றார்.

இங்கு தான் அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்ற விடயம் தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டியவர்களாக உள்ளோம்.

இங்கு அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதன் பொருள்; அறநெறி தவறி, ஆட்சி செய்கின்றவர்களை அந்த அறம் காலனாக (யமன்) மாறி ஆட்சியாளர்களைத் தண்டிக்கும் என்பதாகும்.

இந்த உண்மையை இப்போது நாம் இந்த நாட்டின் அரசியலில் காண்கின்றோம்.

உண்மை. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தன்னைக் கைது செய்வதைத் தடை செய்யுமாறு நீதிமன்றில் முன்பிணை அனுமதி கோரியுள்ளார்.

ஏலவே வெளிநாடுகளுக்கு செல்வதற்கான பயணத்தடையை அவருக்கு நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

இந்நிலையில் தான் கைது செய்யப்படுவதைத் தடுக்குமாறு அவர் நீதிமன்றைக் கோரியுள்ளார் எனில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கைது செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன என்பது நிரூபணமாகிறது.

இங்குதான் ஊழ்வினையும் சூழ்த்தலைப் பட்டுள்ளது. அதாவது கோட்டாபய ராஜபக்ஷ முன்பிணை அனுமதிக்கான விண்ணப்பத்தை நீதிமன்றில் சமர்ப்பிக்காமல் விட்டிருந்தால், சில வேளைகளில் அவர் கைது செய்யப்படாமல் விடக்கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

மாறாக, நீதிமன்றத்திடம் முன் பிணை அனுமதி கேட்டு; அதனை நீதிமன்றம் நிராகரிக்குமாயின், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்யாமல் விடமுடியாது என்ற கட்டாயம் அரசுக்கு வந்துவிடும்.

அதாவது, கோட்டாபய ராஜபக்ஷவைக் கைது செய்வதைத் தடுக்க முடியாது என்பதாக நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்த பின், அவரைக் கைது செய்யாமல் விடுவது எப்படி?

ஆக, கோட்டாவின் கோரிக்கையை நீதிமன்றம் நிராகரிக்கும் பட்சத்தில் அவர் எந்த நேரமும் கைது செய்யப்படலாம்.

எப்படி பார்த்தீர்களா? அன்று அப்பாவித் தமிழ் மக்களைக் கைது செய்து சிறையில் அடைத்து கொடுமைப்படுத்தியமை இன்று ஊழ்வினையாகத் திரண்டு தாக்குகிறது.

இதைத்தான் முன்கூட்டியே சிலப்பதிகாரம் கூறிற்று.

# தமிழின அழிப்பின் நினைவகமாக செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானம்

## நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் முன்மொழிவு

(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானம் தமிழின அழிப்பின் நினைவகமாக பேணும் முன்மொழிவு நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரன் அவர்களினால் நேற்றைய சபை அமர்வில் முன்மொழியப்பட்டது.

குறித்த முன்மொழிவினை வைத்து உரையாற்றிய தவிசாளர் மயூரன்,

இனஅழிப்பு செய்யப்பட்டு புதைக்கப்பட்ட எமது உறவுகள் இன்று செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்திலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டு வருகின்றனர்.

எம்மீது நிகழ்த்தப்பட்ட இனஅழிப்பின் சாட்சியமாக இவ்மயானம் காணப்படுகின்றது. இந்நிலையில் இன அழிப்பின் சாட்சியங்களைப் பாதுகாக்க வேண்டியதும் அதனை இளைய தலைமுறைக்குக் கடத்த வேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கின்றது.

குறித்த இந்து மயானம் எமது சபை எல்லைக்குள் காணப்படுகின்ற நிலையில் இதனை ஒரு மயானமாகத் தொடர்ந்து பேணாமல் இது எம் மீதான இன அழிப்பின் ஒரு சாட்சியகமாக, நினைவகமாகப் பேணுவதற்குரிய நடவடிக்கைகளை நாம் அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்ற முன்மொழிவினை முன்வைப்பதோடு, குறித்த விடயம் தொடர்பில செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான சபையினருடன் கலந்துரையாடல் செய்து அது தொடர்பான விபரங்களுடன் குறித்த முன்மொழிவினை உங்களின் ஏகமனதான ஆதரவுடன் ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவதற்காக அடுத்த சபை அமர்வில் சமர்ப்பிக்கின்றேன் என்றார். (ம-7,33)

# காரைநகர் - ஊர்காவற்றுறை இடையே மேம்பாலம் அமைப்பு

## பிரதேச ஒருங்கிணைப்புக் குழு அனுமதி

(ஊர்காவற்றுறை)

காரைநகருக்கும் - ஊர்காவற்றுறைக்கும் இடையில் மேம்பாலம் கட்டுவதற்கான அனுமதியினை பிரதேச ஒருங்கிணைப்புக்குழு வழங்கியுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பாராளுமன்ற உறுப்பினர்கஇளங்குமரன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் மக்களின் அடிப்படைத்தேவைகள் தொடர்பாக பல முக்கிய விடயங்கள் ஆராயப்பட்டன. அதன்போதே குறித்த அனுமதியானது வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேம்பாலம் கட்டுவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் துரிதகதியில முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை குறித்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், எழுவைதீவு இறங்குதுறையை ஆழப்படுத்துவது, கடற்படை வசமுள்ள தனியாருக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பது, எழுவைதீவு மக்களின் நீண்டகால குடிநீர்ப்பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் போன்ற விடயங்களும் கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

# போதைவஸ்துக்களுடன் நால்வர் அதிரடிக் கைது

(அநுராதபுரம்)

அநுராதபுரம் விஜயபுர பகுதியில் நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போது போதைப்பொருள் வியாபார வலையமைப்புடன், தொடர்புடைய சந்தேக நபர்கள் நான்கு பேரை போதைப்பொருள் தடுப்புப் பணியகத்தின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

பொலிஸ்புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய அநுராதபுரம் பொலிஸ் பிரிவின் விஜயபுர பகுதியில் நேற்று 17ஆம் திகதி புதன்கிழமை நடத்திய விசேட சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்கள் நான்கு பேரைக் கைது செய்துள்ளதுடன், ஐஸ் போதைப் பொருள் மற்றும் ஹெரோயின் போதைப் பொருட்களை அநுராதபுரம் பொலிஸ் விசேட போதைப்பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அநுராதபுரம் விஜயபுர மற்றும் நாகசேன மாவத்தைப் பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்ட 35,43,46 மற்றும் 48 வயதுடையவர்கள் என்பது ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் நான்கு பேரும் அநுராதபுரம் மற்றும் அதனை அண்மித்த நகரங்களுக்கு போதைப் பொருட்களை விநியோகிப்பவர்கள் என்பதும் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகளில் இருந்து அம்பலமாகியுள்ளது.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் அநுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

ஆயாக்கடவை

# சித்திவிநாயகருக்கு நாளை கொடியேற்றம்

(புன்னாலைக்கட்டுவன்)

யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் தேவஸ்தான பராபவ வருட மஹோற்சவமானது நாளை (19) வெள்ளிக்கிழமை காலை 10.15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினொரு தினங்கள் இடம்பெறவுள்ள ஆலய மஹோற்சவத்தனில் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் இரதோற்சவமும் மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# பிரதேச மட்டங்களிலேயே இலஞ்ச ஊழல் விசாரணை

## களமிறங்கும் ஆணைக்குழு

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மக்கள், இலஞ்ச ஊழல் முறைப்பாடுகளைவழங்க கொழும்பு பிரதான அலுவலகத்திற்கு வருகை தருவதில் எதிர்கொள்ளும் சிரமங்களைத் தவிர்க்கும் நோக்கில் நாடளாவிய ரீதியில் புதிதாக 23 பிரதேச அலுவலகங்களைத் திறக்க இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் ரங்க திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்பிரகாரம் பிரதேச மட்டத்திலேயே முறைப்பாடுகளைப் பொறுப்பேற்றல், விசாரணைகளை முன்னெடுத்தல் மற்றும் வழக்குத் தாக்கல்செய்தல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் வகையில் அலுவலகங்களைத் தயார்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் இந்தப் புதிய கிளைகளில் சட்ட அதிகாரிகள் உட்பட மொத்தம் 971 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனி மாத இராசி பலன்கள் (15.06.2026 - 16.07.2026வரை)

## பதவி மாற்றம் வரும் நேரம்



**துலாம் இராசி வாசகர்களே!**

பராபவ வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது. மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்ரன் தொழில் ஸ்தானத்தில் உச்சம் பெற்ற குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே திடீர் திடீரென மாற்றமும், ஏற்றமும் வந்து சேரும். உடன் பிறப்புகளுக்கான திருமண முயற்சி கைகூடும். உள்ளத்தில் நினைத்ததை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்கள் வரலாம். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பதவி மாற்றம் திருப்தியாக அமையும். பொது வாழ்வில் உள்ளவர்கள் முன்னேற்றப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பார்கள்.

**ரிஷப - செவ்வாய்**

ஆனி மாதம் 5ஆம் திகதி (19.6.2026) அன்று செவ்வாய், ரிஷபஇராசிக்குச் செல்கிறார். உங்கள் இராசிக்கு 2.7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் அஷ்டம ஸ்தானத்தில் அடியெடுத்து வைக்கும் பொழுது ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்ய இயலாது. பணிபுரியும் இடத்தில் பதற்றம் உருவாகும். உயர் அதிகாரிகள் உங்களிடம் வேலைப் பளுவை சுமத்துவர். அதனால் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு தோன்றலாம். வரன் முடிவானாலும் திருமணம் தாமதப்படும். ஒரு கடனை அடைக்க இன்னொரு கடன் வாங்கும் சூழ்நிலை உருவாகும். கூட்டாளிகளிடம் கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. சிம்ம - சுக்ரன் கடக இராசியில் சஞ்சரிக்கும் சுக்ரன், ஆனி 21ஆம் திகதி (5.7.2026) அன்று சிம்ம இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கும். அஷ்டம ஸ்தானத்திற்கும் அதிபதியாக விளங் குபவர் சுக்ரன். அவர் இலாப ஸ்தானத்திற்கு வரும்போது திடீர் வரவும், திடீர் செலவும் ஏற்படும். வெளிநாட்டில் வசித்து குடியுரி மைக்காக காத்திருந்தவர்களுக்கு, இப்போது அது கிடைக்கலாம். தாய்நாடு செல்ல முடியாமல் தத்தளித்தவர்களுக்கு, அதற்கான வாய்ப்பு வந்துசேரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வழக்குகள் முடிவிற்கு வரும். இட மாற்றம், உத்தியோக மாற்றம் எதிர்பார்த்தபடி அமையும்.

**சனி வக்ரம்**

ஆனி 31ஆம் திகதி (15.7.2026) அன்று மீன இராசியில் சனி வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 4, 5 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி வக்ரம் பெறுவதால், குடும்பத்தில் சில குழப்பங்கள் உருவாகும். பிள்ளைகளாலும் பிரச்சினைகள் வரலாம். குருவின் பார்வை சனியின் மீது பதிவதால் பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. இருப்பினும் ஒரு பிரச்சினை முடிந்தால் அடுத்த பிரச்சினை தலைதூக்கும்.

உங்கள் இராசிக்கு 3.8, 12 ஆகிய




இடங்களில் சனியின் பார்வை பதிகிறது. எனவே முன்னேற்றப் பாதையில் சில இடையூறுகள் வந்தாலும், அதைச் சமாளிக்கும் ஆற்றலைப் பெறுவீர்கள். உங்களின் பிரச்சினைகளை முக்கிய நபர்கள் சிலர் தீர்த்து வைக்க முன்வருவர். பயணங்கள் பலன் தருவதாக அமையும். உத்தியோகத்தில் விருப்ப ஓய்வு பெற்றுக் கொண்டு வெளியில் வந்து, சுயதொழில் தொடங்கும் சூழ்நிலை உருவாகும். இக்காலத்தில் சனி பகவானை வழிபாடு செய்வதன் மூலம் நற்பலன்களைப் பெற இயலும்.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மாதக் கடைசியில் மகிழ்ச்சியான சம்பவம் நடைபெறும். தொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு கூட்டு முயற்சி பலன்தரும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் பதவி கிடைக்கும். கலைஞர்களுக்கு புகழ் கூடும். மாணவ -மாணவிகளுக்கு படிப்பில் கவனச் சிதறல் ஏற்படலாம். பெண்களுக்கு வருமானம் திருப்தி தரும். உங்கள் பெயரிலேயே இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு.

இம்மாதம் துர்க்கை வழிபாடு துயரங்களைப் போக்கும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:-** ஜூன்: 16, 17, 20, 21, 26, 27, ஜூலை: 3, 4, 14, 15.


**மகிழ்ச்சி தரும் வண்ணம்:-** கருநீலம்.

**குரு - சுக்ரன் சேர்க்கை**

கடக இராசியில் 15.6.2026 முதல் 4.7.2026 வரை குரு-சுக்ரன் சேர்க்கை ஏற்படுகிறது. உங்கள் இராசிக்கு 3.6 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். உங்கள் இராசிநாதனாகவும், அஷ்ட மாதிபதியாகவும் விளங்குபவர் சுக்ரன். இவை இரண்டும் ஒன்று கூடும்போது "விபரீத ராஜ யோகம்" செயற்படும்.எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். தொழிலில் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். உத்தியோகத்தில் தலைமைப் பதவிகள் தேடி வரும். பணிநீக்கம் செய் யப்பட்டவர்கள் மீண்டும் பணியில் சேர வாய்ப்பு உண்டு. தொழிலில் இருந்த குறுக்கீடு அகலும், பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு சாதகமான நேரம் இது.

ஜோதிடக் கலைமணி
**சிவல்புரி சிங்காரம்**

## பார்க்கும் குருவால் பணவரவு



**விருச்சிக இராசி வாசகர்களே!**

பராபவ வருடம் ஆனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் செவ்வாய் சொந்த வீட்டிலேயே சஞ்சரிக்கிறார்.அஷ்டம லாபாதிபதியான புதன் சூரியனோடு இணைந்து புத ஆதித்ய யோகத்தை உருவாக்குகிறார். தன - பஞ்சமாதிபதியான குரு உச்சம் பெற்று உங்கள் இராசியைப் பார்க்கிறார். எனவே தொட்ட காரியங்கள் வெற்றியாகும். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைக்கும். முக்கிய நபர்கள் வீடு தேடி வந்து உங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவர். பார்க்கும் குருவால் பணப் புழக்கம் அதிகரிக்கும். தலைமை பதவிகளும் தானாக தேடி வரும். கல்யாணக் கனவு நனவாகும்.

**ரிஷப - செவ்வாய்**

ஆனி மாதம் 5ஆம் திகதி (19.6.2026) அன்று செவ்வாய், ரிஷப இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கும். 6ஆம் இடத்திற்கும் அதிபதி யான அவர், சப்தம ஸ்தானத்தில் சஞ்சரித்து உங்கள் இராசியை பார்ப்பதால் ஒப்பற்ற நற்பலன்கள் இல்லம் தேடி வரப்போகிறது. தொட்டது துலங்கும். துணையாக இருக்கும் நண்பர்கள் தோள் கொடுத்து உதவுவர். இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தென்படும். சொந்தத் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். வாடகை கட்டடத்தில் இருக்கும் தொழிலை, சொந்தக் கட்டடத்திற்கு மாற்றும் முயற்சி கைகூடும். சந்தர்ப்பங்கள் அனைத்தும் சாதகமாக அமையும்.

**சிம்ம-சுக்ரன்**

கடக இராசியில் சஞ்சரிக்கும் சுக்ரன் ஆனி 21ஆம் திகதி (5.7.2026) அன்று சிம்ம இராசிக்கு செல்கிறார். உங்கள் இராசிக்கு சப்தம - விரயாதிபதியானவர் சுக்ரன். அவர் தொழில் ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் போது, தொழில் வளர்ச்சி திருப்தி தரும். வெளிநாட்டு முயற்சி அனுகூலம் தரும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டு. கூட்டுத் தொழிலில் இருந்து விலகி தனித்து இயங்கும் ஆற்றல் உருவாகும். பெற்றோரின் ஆதரவு திருப்தி தரும் விதம் அமையும். அதிகாரிகள் ஆதரவோடு முன்னேற்றம் காண்பீர்கள்.

**சனி வக்ரம்**

ஆனி 31ஆம் திகதி (15.7.2026) அன்று மீன இராசியில் சனி வக்ரம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 3, 4 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சனி வக் ரம் பெறும் பொழுது, உடன் பிறப்புகளின் அனுசரிப்பு குறையும். சிலருக்கு ஊர் மாற்றம், வீடு மாற்றம் உருவாகும். தாயின் உடல் நலத்தில் கவனம் தேவை. இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவை தக்க வைத்துக்கொள்வது நல்லது.




உங்கள் இராசிக்கு 2, 7, 11 ஆகிய இடங்களில் சனியின் பார்வை பதிகிறது. உச்ச குருவின் பார்வை பெற்ற சனி என்பதால், இக்காலத்தில் நல்ல சந்தர்ப்பங்கள் வந்து சேரும். சுப விரயங்கள் அதிகரிக்கும். பெண் பிள்ளைகளின் கல்யாணத்தை முன்னிட்டு சீர்வரிசை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பழைய வாகனங்களை கொடுத்து விட்டு புதிய வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக்கொள்ளலாமா? என்று சிந்திப்பீர்கள். எதையும் திட்டமிட்டு செய்து வெற்றி காணும் நேரம் இது.

பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு மேலிடத்து ஆதரவு திருப்தி தரும். வியாபாரம் மற்றும் தொழில் வெற்றி நடைபோடும். உத்தியோகத்தில் உயர்பதவி கிடைக்கும். கலைஞர்களுக்கு அடுக்கடுக்காக ஒப்பந்தம் வந்து சேரும் மாணவ-மாணவிகளுக்கு மதிப்பெண் உயரும். பெண்களுக்கு குடும்பத்தில் சுபகாரியங்கள் நடைபெறும். வருமானம் போதுமானதாக இருக்கும்.

இம்மாதம் ராஜ அலங்கார முருகனை வழிபாடு செய்வது வளர்ச்சியைத் தரும்.

**பணத்தேவையைப் பூர்த்தி செய்யும் நாட்கள்:-** ஜூன் : 17, 18, 19, 23, 24, 29, 30, ஜூலை: 5, 6, 15, 16

**மகிழ்ச்சி தரும் வண்ணம்:-** வைலட்.

**குரு - சுக்ரன் சேர்க்கை**

கடகஇராசியில் உச்சம் பெற்று சஞ்சரிக்கும் குரு. 15.6.2026 முதல் 4.7.2026 வரை சுக்ரனுடன் இணைந்து சஞ்சரிக்கிறார். தேவகுரு-அசுரகுரு இணைத்து சஞ்சரிப்பதால், வரும் மாற்றங்கள் நல்ல மாற்றங்களாகவே அமையும். தன - பஞ்சமாதிபதியாக குரு விளங்குவதால், குடும்பத்தில் உள்ள சிலர் வேலைவாய்ப்பை பெறுவர். வருமானம் உயரும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். அரசியல் களத்தில் இருப்பவர்களுக்கு நல்ல பொறுப்புகளும், பதவிகளும் கிடைக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## பட்டா...

ழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம், கண்டி பிரதான வீதியின் வவுனியா - பூனாவ, கல்கண்டேகம பகுதியில் நேற்று (17) அதிகாலை குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நுரைச்சோலையிலிருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்ற பட்டா வாகனம் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், பின்னால் வந்த உரம் ஏற்றிய லொறி அதனுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் குறித்த லொறி பட்டா வாகனத்தின் மீது கவிழ்ந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் நுரைச்சோலைப் பகுதியைச் சேர்ந்த 35 மற்றும் 43 வயதுடைய இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை பூனாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)


மஹஜன சம்பத NLB
திகதி 2026.06.17
சீட்டிழுப்பு இலக்கம் 6221
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
G 6 2 2 8 9 9
அத சம்பத
G 2 8 9 9
சீட்டிழுப்பு இலக்கம் 0796

சுப தவசக்
திகதி 2026.06.17
சீட்டிழுப்பு இலக்கம் 8337
மிதுனம் 19 25 64
8926

தன நிதானய
திகதி - 2026.06.17
சீட்டிழுப்பு இலக்கம் - 2251
F 08 47 56 72 F

மெகா பவர்
திகதி 17/06/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2569
I 15 09 49 51 76

NLB ஜய JAYA
திகதி 2026.06.17
சீட்டிழுப்பு இலக்கம் 0489
C 3 8 8 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4463
சீட்டிழுப்பு திகதி 17.06.2026
E 35 36 75 76

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.06.17
சீட்டிழுப்பு இலக்கம் 1530
மிதுனம் 16 38 57 58 மிதுனம்


## செம்மணியை...

மதி வழங்கியுள்ளது.

நீதி அமைச்சர் தலைமையிலான குழுவினர் அகழ்வாய்வுத் தளத்திற்கு விஜயம் செய்ய நீதிமன்ற அனுமதி கோரி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்திருந்தனர்.

அதன் அடிப்படையில் நேற்றுப் புதன்கிழமை வழக்கு அழைக்கப்பட்ட நிலையில், நீதி அமைச்சின் விசேட குழுவினருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இதனடிப்படையில் நீதி அமைச்சர் தலைமையிலான குழு நாளை செம்மணிக்கு விஜயம் செய்யவுள்ளது. அதேவேளை குறித்த அமைச்சர் குழுவுடன் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகத்தின் ஆணையாளர்கள் உள்ளிட்ட விசேட பிரநிதிகள் குழுவும் இணைந்து கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## உமையாள்புரத்தில்...

ஆனந்தராஜ் நிதர்சன் (வயது - 35) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வரும் குறித்த இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் ஏ-9 வீதி உமையாள்புரம் பகுதியில் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் உயிரிழந்துள்ளார். இந்த விபத்துத் தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலி ஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,315,316)

## ஆடியபாதம்...

இன்று வியாழக்கிழமை (18.06) மற்றும் நாளை வெள்ளிக்கிழமை (19.06) ஆகிய இரு தினங்களிலும் திருநெல்வேலிச் சந்தி ஆடியபாதம் வீதி பகுதியில் தார்ப்படுக்கை இடும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் காரணமாக நியூ லட்சுமி மண்டபம் முதல் திருநெல்வேலிச் சந்தைப்பகுதி லவின்ஸ் சைவ உணவகம் வரையிலான வீதிப்பகுதி மேற்குறிப்பிட்ட இரு நாட்களிலும் போக்குவரத்திற்காக முழுமையாக மூடப்பட்டிருக்கும்.

எனவே பொதுமக்களும் வாகனச் சாரதிகளும் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறும் அபிவிருத்திப் பணிகள் தடையின்றி சிறப்பாக நடைபெறத் தங்களது முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறும் நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப. மயூரன் கேட்டுக்கொண்டுள்ளார். (ம-7,33)

## கோட்டாவின்...

கோட்டாபய ராஜபக்ஷவினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை பரிசீலனைக்காக இன்று அழைக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் ரொஹான்த அபேசூரிய மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோரடங்கிய நீதியரசர்கள் ஆயத்தின் முன்னிலையில் அழைக்கப்பட்டது.

இதன்போது இந்த மனுவின் காரணிகளை உறுதிப்படுத்துவதற்காக இன்று அழைக்க உத்தரவிடுவதாக தலைமை நீதியரசர் உத்தரவிட்டார்.

இதற்கமைய இந்த மனுவை பரிசீலிப்பதற்காக இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் ரொஹான்த அபேசூரிய மற்றும் சரத் திஸாநாயக்க ஆகியோரடங்கிய நீதியரசர்கள் ஆயத்தின் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. (ம-7)

## இலங்கையில்...

பணிகள் நேற்றுப் புதன்கிழமை யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிபதி எஸ். லெனின்குமார் தலைமையில் நடைபெற்றது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 14 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் ஏற்கெனவே அடையாளம் காணப்பட்ட என்புக்கூடுகளில் குழந்தை ஒன்றும் சிறுவர் ஒருவருடையதுமாக 05 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

நேற்றைய அகழ்வுப் பணிகளின் போது, என்புக்கூடொன்றின் இடுப்பு பகுதியில் ஒரு இரும்பு வளயம் ஒன்று சான்றுபொருள் மீட்கப்பட்டுள்ள நிலையில், சிறுமி ஒருவருடைய பிளாஸ்ரிக் காப்பை ஒத்த பொருள் ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அதனைச் சுத்தப்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் இதுவரையிலான அகழ்வுப் பணிகளின் போது, 380 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 362 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் மன்னார் சதொச புதைகுழியில் இருந்து 376 மனித என்புக்கூடுகள் மீட்கப்பட்டமையே, இலங்கையில் அதிகளவான மனித என்புக் கூடுகள் மீட்கப்பட்ட புதைகுழியாகக் காணப்பட்டது.

இந்நிலையில் செம்மணியில் நேற்றுப் புதன்கிழமையுடன் 380 மனித என்புக் கூடுகள் அடையாளம் காணப் பட்டுள்ளன.

அடையாளம் காணப்பட்ட என்புக் கூடுகளில் 362 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்ற கட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இலங்கையில் அதிகளவான மனித என்புக் கூடுகள் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழியாக செம்மணி மனிதப் புதைகுழி பதிவாகியுள்ளது. (ம-7,33)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



உத்தியோகபூர்வ முடிவுகள்
17.06.2026 வெற்றி வாரம் 0929
ஆங்கில எழுத்து Z
9 5 3 3 4 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,692,144.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3195
25000 பணப் பரிசு 57274
சீட்டிழுப்பு திகதி 2026.06.17 தினம் புதன்கிழமை
09 12 33 41 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 135,513,726.40

சனிதா
திகதி 17.06.2026 வெற்றி வாரம் 5356
05 16 53 64 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,668,817.60
ரூ. 50,000/- 27563

சசிரி
வெற்றி வாரம் 1025
சீட்டிழுப்பு திகதி 17.06.2026 புதன்கிழமை
09 15 26
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,932,640.00


ராசி
சீட்டிழுப்பு வாரம் 4907
சீட்டிழுப்பு திகதி 17.06.2026 தினம் புதன்கிழமை
13 31 41 51 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,031,706.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 27 07 21 70 72
23701
17.06.2026 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.295,552,833.20

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
வெற்றி வாரம் 3021
சீட்டிழுப்பு திகதி 2026.06.17
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.61,295,747.20
24 36 49 68 K


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சிற்பாசாரியர்
திரு.விஸ்வநாதன்
அம்பலவாணர்
தில்லையம்பலம்

தோற்றம் 25.05.1943

மறைவு : 21.07.2023

மூன்றாண்டுகள்
கடந்தும் மறையாத
உங்கள் நினைவு
மூச்சோடு
கலந்திருக்கிறது
உங்கள் அன்பு

உங்கள் பிரிவை
எண்ணி இன்று மனம்
ஏங்கினாலும்
என்றென்றும் எங்கள்
இதயங்களில்
நிலைத்திருப்பீர்

(2426)

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மண்ணுலகில்
17 - 11 - 1951



விண்ணுலகில்
17 - 06 - 2026

## திரு. சொக்கலிங்கம் சிவபாலன் (சிப்பி)

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 54,சப்பல் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சொக்கலிங்கம் சிவபாலன்(சிப்பி) அவர்கள் நேற்று (17.06.2026) புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான நடராஜா - மகேஷ்வரிதேவி தம்பதிகளின் அன்பு மருமகனும் சாந்தகௌரி அவர்களின் அன்புக் கணவரும் நடராஜா, விமலதாசன், பாஸ்கரன், வசந்தா ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோபிநாத் அவர்களின் அன்புத் தந்தையும் காயத்திரியின் அன்பு மாமனாரும் சாஹிஷ்ணுவின் அன்பு அப்பப்பாவும் கௌரிதேவி, ஸ்ரீஸ்கந்தகௌரிதாசன், விஜயலக்சுமி, காலஞ்சென்றவர்களான விமலராணி, கார்த்திகா மற்றும் ஜோர்ஜ் புவல், வரதராஜா, ரஜனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.06.2026) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பித்து பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

54, சப்பல் வீதி,
யாழ்ப்பாணம்.

(7864)

தகவல்: குடும்பத்தினர்.
[illegible]

# மணப்பெண் தேவை

01.காரைநகர், இந்து, 1991, Engineering, Singapore மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (55580)

02.சாவகச்சேரி, இந்து, 1995, Computer Science & Engineering, Software Engineer, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(54523)

03.யாழ், இந்து, 1995, A/L commerce, Company manager, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54400)

04.அளவெட்டி, இந்து, 1995, Masters in Civil Engineering (UK), Cvil Engineer, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53654)

05.உரும்பிராய், இந்து, 1992, Bsc (Hons), Phd, Lecture, இலங்கை மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(54236)

06.கரவெட்டி, இந்து, 1989, Biomedical and Electrical Engineering, Software Engineer, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(33630)

07.வல்வெட்டி, இந்து, 1986, Bachelor in Business Management, Retile Manager of Super Market, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (50435)

08.மீசாலை, இந்து, 1985, Information Technology(IDM), Commercial employee/ preparotor, Divorce, France citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34746)

09.கொக்குவில், இந்து, 1993, Aeronautical Engineering Master Degree, Lead Fluid Dynamics Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (33457)

10.காரைநகர், இந்து, 1985, Bsc Hons, Retail Business, Uk Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (33985)

(C-5855)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

S.Sharma J.P
www.thaalee.com
074 387 3686
077 539 3728

## பதிலளிப்பதற்கு முன் நிதானியுங்கள்

ஒரு உணர்ச்சியான பதில் வெறுப்பின் அலையை பற்றவைக்கலாம்.
ஒரு நிமிட சிந்தனையின் மூலம் அதைத் தடுக்க முடியும்.

பகிர்வதற்கு முன் உங்களையே கேளுங்கள்:

- இந்த தகவல் உண்மையா?
- இதை பரப்புவதால் யாருக்கு நன்மை?
- இதனால் யார் பாதிக்கப்படலாம்?

அமைதியான சிந்தனை வெறுப்புப் பேச்சை தோற்கடிக்கும்.
சிந்தனை அமைதியைப் பாதுகாக்கும்.

இந்த தகவல் SOND அமைப்பினால், ஐ.நா. இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

(7775)

## பணியாளர் வெற்றிடம்

கணனி அறிவுடன் கூடிய கணக்காளர் (HNDA/AAT) (பெண்கள்)

- முன் அனுபவம் விசேட தகைமையாகக் கொள்ளப்படும்.
- முன் அனுபவம் உடையவர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்கப்படும்

❖ EPF/ ETF கொடுப்பனவு வழங்கப்படும் ❖ நிரந்தரத் தொழில்

சுயவிபரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்

(7862)

ESS JEY ELECTRICALS, No.09, STANLEY ROAD, JAFFNA.
021 222 2564/ 021 222 7430

ஸ்ரீ வல்லிபுரேசன் துணை


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

ஜாமதக்கினி கோத்திரம்

அமரர் பிரம்மஸ்ரீ
கணபதிசாமிக்குரு சுதர்சனக்குரு
(பிரதம குரு, ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்)

திதி : ஆனி மாத வளர்பிறைச் சதுர்த்தி

பிரிந்தாலும் மனதை விட்டு
நீங்காத தந்தையே,
பேரன்பின் நிழலாக வாழும்
எம் இதயமே.
ஆண்டுகள் இரண்டு கடந்தும்
குறையாத உம் நினைவே,
ஆயுள் முழுதும் தொடரும்
எம் அன்பின் காவியமே



வையகம் 17.06.1948
வைகுண்டம் 09.07.2024

சிவன் கோவிலடி,
[illegible]

(2427)

குடும்பத்தினர்

## யாழி...

காங்கேசன்துறையிலிருந்து இந்தியாவின் நாகப்பட்டினத்துக்கு முன்னெடுக்கப்படும் சிவகங்கை பயணிகள் கப்பலில் பயணிக்கவிருந்த இலங்கை மற்றும் இந்தியப் பிரஜைகளே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை கைது செய்யப்பட்டவர்களில் 09 இலங்கையர்களும் 17 இந்திய பிரஜைகளும் உள்ளடங்குகின்றனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தங்கத்தை உடலுக்குள் மறைத்து வைத்துள்ளனரா? என்பதை உறுதிப்படுத்துவதற்காக, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் சுங்க ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த நிலையில், சுங்க அதிகாரிகளினால் அனுமதிக்கப்பட்டவர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனை எடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ம-7,33)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org